


"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி

ஆசிரியர் : ஸ்ரீ. கே. எஸ். வேங்கடரமணி.

| மாலை 1 | ஞாயிறு 9-10-38 வெகுதான்யஹு புரட்டாசிமீ 23உ | முத்து 2 |
|---|---|---|

# பொருள் அடக்கம்


| விஷயம் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | காங்கிரஸ் சீர்திருத்தம் | ... | 26 |
| 2. | போகிற போக்கில் | ... | 27 |
| 3. | அரிசி சொன்ன கதை | ... | 29 |
| 4. | வலை வீச்சு | ... | 30 |
| 5. | சிட்டை | ... | 32 |
| 6. | பலாச்சுளை ("ரஸிகன்") | ... | 33 |
| 7. | கஞ்சாமடம் (ந. பிச்சமூர்த்தி) | ... | 38 |
| 8. | எங்கள் ஊர் ரேடியோ ("சிட்டி") | ... | 41 |
| 9. | கவியின் மனோதிடம் (தேவதத்தன்) | ... | 44 |
| 10. | நாளேர் (கொத்தமங்கலம் சுப்பு) | ... | 46 |
| 11. | மதிப்புரை | ... | 47 |
| 12. | சினிமா | ... | 48 |


"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்களெல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

# காங்கிரஸ் சீர்திருத்தம்

காங்கிரஸ் அதிகாரத்துக்கு வந்ததி லிருந்து அதைப் பின்பற்றுவதாகச் சொல்லும் அநேகர் அநீதியான துறை களில் இறங்கி, காங்கிரஸின் மூலக் கொள்கைகளான ஸத்தியம் அஹிம்ஸை இதுகளுக்கு முற்றிலும் மாருய் நடந்து கொள்ளுகிருர்கள் என்று மகாத்மா காந்தி அடிக்கடி 'ஹரிஜன்' பத்திரிகை யில் கொஞ்ச காலமாய் எழுதிவருவது எல்லோருக்கும் தெரிந்ததே. முக்கியமாக, காங்கிரஸ் சபை நிர்வாகத் தேர்தல் களில் பலாத்காரம் கைக்கூலி முதலான சாதனங்கள் சாதாரணமாய் உபயோகப் பட்டு வருகின்றன என்பதற்கு ஐய மில்லை. இத்தீய பழக்கங்களை ஒழிக்கும் பொருட்டு காங்கிரஸ் அமைப்பில் சில மாறுதல்கள் அவசியமென்று காந்தி யடிகள், புது டில்லியில், சமீபத்தில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் எடுத்துச் சொன்னர். முக்கிய மாக, காங்கிரஸ் அங்கத்தினராய்ச் சேர விரும்புவோர் வருஷத்துக்கு 5000 கஜங் களுக்குக்குறையாமல் நூல் சந்தா கட்ட வேணுமென்றும், ஐந்து வருஷமாவது விடாமல் காங்கிரஸ் அங்கத்தினர்களாய் இருந்து வந்தவர்களையே காங்கிரஸ் சபைகளில் அதிகாரப் பதவிக்குப் பொறுக்கியெடுக்க வேணு மென்றும் அவர் அபிப்பிராயம். இப்படி வடிக்கட்டி ஞல் காங்கிரஸ் அங்கத்தினரின் தொகை குறைந்துவிடுமோ என்று ஆக்ஷேபிக் கலாம். அப்படிக் குறைவு வந்தால் ஒரு கெடுதலுமில்லையென்றும், ஆயிரம் போலிக் காங்கிரஸ்காரர்களை விட பத்து ஒழுங்கான காங்கிரஸ்காரர்களே மேல் என்றும் அவர் வாதிக்கிருர். மேலும், ஸத்தியமும் அஹிம்ஸையும் ஓங்க வேண்டுமானல், அரசாங்கத்தார் கூடிய சீக்கிரம் ஹிம்ஸா சம்பந்தமான முறை களைக் கையாளுவதை நிறுத்தவேணு மென்றும், தான் பிரஸ்தாபித்திருக்கும் 'அமைதிப் படை' என்ற விஷயத்தை ஆராய்ந்து அப்படைகளை ஏற்படுத்தி வந்தால் குற்றங்களும் அக்கிரமங்களும் தலையெடுக்காமல் செய்ய அதே போதும் என்றும் சொல்லுகிருர்.

தற்காலம் காங்கிரஸில் காணப்படும் அழுக்குகளைப் போக்க வேண்டியது அவசியமே. நீடித்தகாலம் காங்கிரஸில் இருந்து உழைத்தவர்களையே நிர்வாகப் பதவிக்கு தெரிந்தெடுப்பது உசிதம். ஆனல் நூல் சந்தா அனுபோகத்தில் சரிப்படவில்லை என்று தெரிந்து மறுபடி அதை ஏற்படுத்துவது சரியன்று. ஸத்தி யம் அஹிம்சை என்ற தத்துவங்கள் ஜனங்கள் மனதை ஊடுருவ வேண்டியது அவசியமே. ஆகிலும் ஒரு அரசியல் கட்சியில் சேரும் பல்லாயிரம் பேரும் யதிதர்மம்போன்ற கடுமையான கட்டுப் பாடுகளை எந்தக் காலத்திலாவது முற்றி லும் அனுசரிப்பார்கள் என்றெண்ணுவது மானிட சுபாவத்துக்குப் பொருந்தாது. காங்கிரஸ் கவர்ன்மெண்டுகள், போலீஸ் ராணுவப்படை முதலியவைகளை உபயோ கிப்பதை நிறுத்தி, அஹிம்ஸையை மேற்கொண்டு ஆட்சி புரிவது என்பதும் நடக்காத காரியம். இது காரணம்பற்றியே அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் மகாத்மாவின் கொள்கையை ஆமோ தித்து பிரேரணைகள் கொண்டுவரப்பட வில்லையென்பது கவனிக்கத்தகுந்தது. தன் மனது நிர்மலமாயிருந்தால் நல்ல பாம்பு ஏன் கடிக்கும்என்று எண்ணி அது சீறி வந்தாலும் திடசித்தமாயிருக்கும் தன்மையை யோகிகளிடத்திலே எதிர் பார்க்கலாம். பாக்கிப் பேரைக் காப் பாற்றத் தடிக்கம்பு இருந்தே தீர வேண்டும். அதுபோலவே, துஷ்டர் களை யடக்க சிக்ஷாசக்தி ராஜாங்கங் களுக்கிருந்தே யாகவேணும். ஆனல் அந்த சக்தியைப் பிரயோகிப்பவர் பிரஜைகளிடம் ஏற்ற வித்தியாச மில்லா மலும், பழிவாங்க வேணுமென்ற நோக்க மில்லாமலும் இருத்தல் அவசியம். அவர் கள் அவ்விதம் நடக்குமாறு செய்யும் வகை குடிகள் கையிலேயே இருக்கிறது. காங்கிரஸ்காரரா யிருக்கட்டும், வேறு எந்தக்கட்சிக்காரரா யிருக்கட்டும், அதி காரம் கைக்கு வந்தால் அதைத் தவருன வழியில் செலுத்தக் கூடும் என்னும் விஷயத்தை ஞாபகத்தில் வைத்து அவர்

(28-ம் பக்கம் பார்க்க.)

போகிற போக்கில் அள்ளித் தெளித்தாலும் என்ன நஷ்டம்? பூமாதேவியின் அன்பு உள்ளவரை, ஒரு தப்புவிதை முளைத்தாலும் குருணி எள் ஆகாதா? ஆயிரம் எண்ணங்கள் சோடை போனாலும், ஒரு எண்ணம் பிழைத்து நிறைவேறினால் வெற்றிதானே? ஐப்பசி மழை வெள்ளம் எல்லாம் வயலுக்கா போகிறது? — கடலுக்குத்தானே ஈசுவரார்ப்பணமாக? மறந்துவிட்டேன், போன பிரதியில் நான் கொடுத்த உறுதி மொழியை!

* * *

சென்ற வாரத்தில் மூன்று பேர்களைப் பற்றியும் ஒரு தேசத்தைப் பற்றியும் எழுத ஆரம்பித்தேன் என்று சொன்னேனல்லவா? அம்மூவரில் இரண்டு பிரமுகர்களை எனக்கு நேரில் தெரியாது— ஹிட்லரையும் முஸோலினியையும். ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் அவர்களை நன்கு தெரியும். என் பூர்வாசிரமத்தில் நான் தொழில் ஆரம்பித்தபோது, அவர் என் குரு. இது வரையில் அவருக்கு நான் கொஞ்சமேனும் குருதக்ஷிணை செலுத்தியதாகத் தெரியவில்லை. ஆகையால் இப்பொழுது அவரைப்பற்றி 'ஜில்' என்று ஒன்றும் எழுதப் போவதில்லை. தவிர, தெரிந்தவர்களைப்பற்றி எழுதுவதைவிட, தெரியாதவர்களைப்பற்றி தைரியமாய் எழுதுவதே பத்திரிகைத் தொழிலுக்கு அழகு; முக்கிய லட்சியம்.

* * *

மியூனிச் சமாதானத்திற்கு முக்கிய காரணம் முஸோலினி என்றே நான் ஊகிக்கிறேன். பிரிட்டிஷ் பிரதம மந்திரி சேம்பர்லேன் ஆகாயவிமானத்தில் மூன்று தடவை பறந்து சென்றது 'காக்ஷி கண் காக்ஷி'யாக இருந்ததே தவிர, காரியம் முடிந்தது அவரால் அல்ல. முஸோலினி, அரசியலில், ஓர் பெரிய தாற்காலிக தந்திரவாதி. பேச்சில் மந்திரவாதி. எல்லா 'டிக்டேடர்'களும் அப்படித்தான். எல்லாம் கண்கட்டி வித்தை. முஸோலினிக்குத் தரகன் சாமர்த்தியம் பூரா உண்டு. கிடைத்தமட்டும் ஒரு கை பார்ப்பார். பயமுறுத்தவும் தெரியும். நயந்து போகவும் தெரியும். மனுஷ்யாள் தராதரத்தை நன்ருக அறிவார். ஹிட்லரோ, தன் மனப்போக்கு மாயையிலே மயங்கி வீராவேசம் கொள்கிறவர். ஸ்வஜாதி அபிமானி; தேசபக்தன். அபிமான ஆவேசத்தில் பரபரப்படைந்து கனவிலும், ஜெர்மன் ஜாதியாரை ஒன்று சேர்க்க ஆசைப்பட்டவர். இந்த இருவரது கொள்கையிலிருந்துதான் சென்ற பத்து வருஷகாலமாக அரசியல் நடவடிக்கைகள் ஐரோப்பாவில் நடந்து வருகின்றன.

* * *

செக்கோஸ்லோவாகியாவைக் கவனிப்போம். அது யுத்தத்திற்குப் பின் பிறந்த ஓர் குடியரசு. சிருஷ்டியிலும் நூதன சிருஷ்டி. ஒன்று சேராத பல பட்டரைகளை ஒன்றுசேர்த்த பொய் அமைப்பு. 1914-ம் வருஷத்திற்கு முன்பு ஸுடேடன் பிரிவு பொஹீமியாவைச் சேர்ந்ததல்ல. ஆஸ்டிரியாவைச் சேர்ந்ததுதான். அதில் 35 லட்சம் ஜெர்மானியர்கள் குடியிருக்கிருர்கள். இப்படிப்பட்ட பிரதேசத்தை வார்ஸேல்ஸ் ஒப்பந்தத்தை அமைத்த புத்திமான்கள், குரோத காமத்தின்பேரில், வேண்டுமென்று பழைய பொஹீமியாவுடன் சேர்த்து ஒரு புதுக் குடியரசாகச் சப்பைக்கட்டுக் கட்டினுர்கள்; இது தூங்கிறவன் காலையோ சிண்டையோ காட்டாமணி வேலியுடன் பழுதைக் கயிறைப் போட்டுக் கட்டுவது போல்! அல்லது, அடிபட்டு விழுந்தவன் ஜேபியில் கை போடுவதுபோல்!

* * *

குரோதத்திலும் காமத்திலும் குரூரத்திலும் பிறந்த வார்ஸேல்ஸ் உடன்படிக்கையைக் குப்பைத் தொட்டியில் இவர்களாகவே கிழித்துப்போட்டிருந்தால், எவ்வளவோ அழகாக இருந்திருக்கும், க்ஷேமமும் உண்டு. ஹிட்லருக்கும் இவ்வளவு பொய் பராக்கிரமும் சக்தியும் ஏற்பட்டிராது. ஸுடேடன் ஜெர்மானியர்கள் ஜெர்மனியோடு சேர வேண்டியது நியாயம்தான். சின்ன நியாயத்தை விரோதம் செய்தாலும், பெரிய நியாயத்திற்கு அது உள்ளடங்கித்தான் இருக்கிறது. ஆனால், மியூனிச் ஒப்பந்தத்தின் எண்ணமும் நோக்கமும் அடிப்படையாய் பூராவும் பிசகு.

பிரிட்டிஷ் மந்திரி சபை 'பாஸிஸ்ட்' நாமத்தை இன்னும் போட்டுக்கொள்ளாவிட்டாலும் — விபூதியையே குழைக்கா

மல் குங்குமம்போல் பொட்டிட்டு வந்தாலும், பேத புத்தி தீர்மானமாய் வந்துவிட்டது. பிரிட்டனிலும் ஜனநாயகம் அழிய ஆரம்பித்துவிட்டது. குடியரசின் கூரை காற்றில் கலைய ஆரம்பித்துவிட்டது. குடியரசுக்கு அடிப்படையான கால்கள் இரண்டு. பேச்சுச் சுதந்திரம், மனதில் எண்ணியதைக் கள்ளங் கபடமன்னியில் சொல்லும் உரிமை தேர்தலில் நிர்ப்பந்த மன்னியில் மனமுவந்து 'ஓட்' கொடுப்பது—இவை இரண்டும் அழிந்தால் குடிசையின் கால் கரையான் பிடித்தாற்போல.

'பாஸிஸ்ட்' அரசாட்சியில் சுயேச்சை இல்லாவிட்டாலும், க்ஷேமம் இருக்கிறதே என்று சுட்டிக் காட்டுகிறார்கள்; திருப்தி அடைகிறார்கள். அது கண்ட எருவைப் போட்டு மேனி அடைந்த நகரத்துக் கத்தரிக்காயைப்போல் இருக்கிறது. அது கண்ணுக்குஅழகு; ஆனால் உடம்புக்குக் கெடுதல். பித்தம்தான் லாபம்.

* * *

சுயேச்சை பிறந்த தாயகமான பிரிட்டனிலேயே, இந்தமாதிரி, குடியரசு அழிய ஆரம்பித்ததைப் பார்க்க நான் வருந்துகிறேன். இதற்கு சாக்ஷி டப் கூபர் ராஜினமா.

* * *

ஆகையால் வார்ஸேல்ஸ் சமாதானம் போல் இந்த மியூனிச் ஒப்பந்தமும் இன்னும் மகத்தான ஓர் சண்டைக்கு கை சேர்க்கும் அடாபிடி ஏற்பாடாக முடியப் போகிறது. ஆப்பிரிக்கா, ஆசியா இரண்டையும் வாயில் போட்டுக் கொள்ளத்தான் இந்த ஏற்பாடு. புலியும் சிங்கமும், கழுகும் கழுதைப் புலியும் ஒன்று சேருவது உலக நன்மைக்கா? ரஷ்ய யானையையும் இந்தியா போலொத்த பசுவையும் நாலு பக்கமும் புகுந்து அடிக்க ஏற்பாடு செய்யும் ஒப்பந்தந்தான் மியூனிச் ஒப்பந்தம். உண்மையில், நல்ல எண்ணமும் சமாதான பாவமும் மனதில் இருந்தால், இந்த மாமிச பக்ஷிணிகளான நாலு பேர்களும் ஒன்றுகூடி, இனிமேல் புல்லையே நாம் தின்போமென்று உறுதி மொழியைக் காரியபூர்வமாய்க் காட்டட்டும். குப்பல் குப்பலாய் மலைபோல் குவித்திருக்கும் பீரங்கி, வெடி குண்டுகளை எல்லாம் தங்கள் கப்பலில் ஏற்றி நாளைய தினமே கடலில், கப்பலோடு, தாங்களே 'டார்பிடோ'வைப் போட்டு முழுக்கட்டும். ஏசுநாதரின் வசனம் வீண்போகாது. "கத்தியால் வாழ்பவன் கத்தியால் அழிவான்".

* * *

ஜனநாயகச் சோலையில் இதுவரை மணமிக்க மலரை நாம் பரித்தோமில்லை. இனிமேல்தான் அதற்குப் பருவம். இந்த சமயத்தில் ஜனநாயகம் அழிந்தால், உலகமே அழியும்; நமது நாகரிகத்தின் வேரே அறுபட்டுப் போகும்; சந்தேக மில்லை. 'பாஸிஸமே' நமது அருமையான, அழகு வாய்ந்த நாகரிகத்திற்கு வேர்க்கரையான். தென்னம் பிள்ளை குலை வைக்கும் சமயத்தில் சோர்ந்து அழிந்தால் குடியானவனுக்கு எவ்வளவு துக்கம்?

இந்த குழப்பம் நிறைந்த சமயத்தில் தான் இந்தியா உலகத்திற்குக் கைகொடுத்து, தன் தர்மத்தையும் சாந்தத்தையும் எங்கும் பரவச்செய்யவேண்டும். மணி.

---

(26-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் எல்லை மீறுதபடிக் கட்டுப்பாடுகள் செய்யவேணும். இந்த நோக்கத்துடனே தான் 'கிரிமினல் லா அமெண்டுமெண்டு ஆக்ட்' ஒழிக்கப்பட வேணுமென்றும் நியாயாதிபத்தியமும் அதிகார வர்க்கமும் பிரிக்கப்பட வேணுமென்றும் அரசியல் அனுபோக முள்ளவர்கள் பலர் மன்றாடுவது. காந்தியடிகள் காங்கிரஸுக்குட்பட்ட மாகாணங்களில் இந்த சீர்திருத்தங்கள் கால தாமதமின்றி நடந்தேறும்பொருட்டு முயற்சித்தல் தகும்.

# அரிசி சொன்ன கதை

தமிழர்களுக்கும் எனக்குப் ரொம்ப தொடர்பு உண்டு. பால்யத்திலிருந்து விருத்தாப்பியம்வரை அவர்கள் என்னுடன் விடாமல் சம்பந்தம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஆரோக்கியத்தையும், போஷிப்பையும் கொடுத்து வருகிறேன்.

ஆனால் பெரும்பாலோர் அவர்கள் சௌகர்யத்திற்குக் காரணமான என்னைப்பற்றி ஒன்றும் விபரமாய்த் தெரிந்துகொள்ளாமல் இருப்பது எனக்கு வருத்தத்தைக் கொடுக்கிறது. அவர்கள் பழைய அரிசிக்கும் புது அரிசிக்கும் உள்ள வித்தியாசத்தைக் கூடத் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். பழகிப்போன பின் என்னை உபயோகித்துக் கொண்டால் சமையல் நன்றாயிருக்கும், கஞ்சி கொஞ்சமாக இருக்கும்; இன்னும் சீக்கிரத்தில் ஜீரணமுமாவேன். என்விலை மதிப்புக்கூட அதிகமாகும்

சகோதர தானியங்கள் எல்லாமுமே கொஞ்சநாள் கழித்து உபயோகிக்கப்பட்டால்தான் நன்றாக இருக்கும். கோதுமையைப் பழசான பிறகுதான் உபயோகிக்கலாம் இல்லாவிட்டால் சாப்பாட்டுக்கு நன்றாயிராது. உருளைக்கிழங்கு இருக்கிறதல்லவா, அதைப் புதுசாக உபயோகித்தால் அஜீரணம் முதலிய வியாதிகள் உண்டாகும்.

நான் பழசாய்ப் போய்விட்டேனா இல்லையா என்பதை நீங்கள் எப்படித் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், நான் சமையலாகும் போது எவ்வளவு பெரிசு பருத்திருக்கிறேன் என்று பாருங்கள். அறுவடையானவுடன் என்னை உபயோகித்தால் பெருக்க மாட்டேன். பழகின பிறகு நான் தண்ணீரை நன்றாக உட்கொண்டு பெருப்பேன். பழசாகப் பழசாக என் அழகு மேன்மைப் படுகிறது.

புது அரிசியை நீங்கள் சாப்பிட்டீர்களானால் ஜீரணமாவதற்கு இடைஞ்சல்கள் உண்டாகலாம். எவ்வளவு இடைஞ்சல்கள் என்பது ஒவ்வொருவரது தேக நிலைமையைப் பொருத்தது. என்னைக் களஞ்சியத்தில் போட்டுச் சேமித்து வைப்பதால் எத்தகை மாறுதல்களை அடைகிறேனென்பது ஒருவருக்கும் தெரியாது. தற்காலத்தில்தான் சாஸ்திர ஆராய்ச்சியாளர்கள் இது விஷயத்தில் சற்று சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும், நான் பரி பக்குவத்தை அடைய எத்தனை நாளாகுமென்று கண்டுபிடித்துச் சீக்கிரத்தில் நான் பழமை அடைவதற்கான வழிகளையும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

புத்தப் புதுசில் என்னை உபயோகித்தால் நான் அஜீரணத்தைக் கொடுக்கிறேனென்று சொன்னேனல்லவா? இதைக் கொண்டு சிலர் என்னிடம் ஆரம்பத்தில் விஷம் இருப்பதாகவும், சேமித்து வைக்கவே, நாளடைவில் விஷம் மறைந்து போவதாகவும் நினைக்கிறார்கள். என்னிடம் சில வேண்டப்படாத வஸ்து இருக்கலாம். ஆனால் அது மிக மிகக் கொஞ்சமானதால் அது மானிட சரீரத்தைப் பாதிக்க முடியாது.

புது அரிசியைச் சாப்பிட்டால் உங்களுக்கு வயிறு பளு உண்டாகும்; வயிற்று நோவும், சில சமயங்களில் பேதியும் ஏற்படும். இது ஏனென்றால் புது அரிசி ஜீரணிக்க முடியாமல் சிறு குடலுக்குள் போகும்போது அங்குள்ள கிருமிகளால் தாக்கப் படுவதால் வயிறு வீக்கமெடுத்து பேதி உண்டாகிறது.

புதிதாக இருக்கும்போது நான் அதிகச் சோறு காண்கிறேன் ஆனாலும் ஜாடராக்கினி என்னை தாக்குவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறது. என்னைச் சமைக்கும்போது அதிகமாகக் கஞ்சி உண்டாவதால் நான் கட்டிபோல் வயிற்றிற்குள் இருக்கிறேன். என் மத்திய பாகங்களை ஜாடராக்கினி தாக்க முடியாமல் இருக்கிறது. நான் பழசாகிவிட்டால் நான் வயிற்றிற்குள் தனித்தனியாய் இருக்கிறேன். சீக்கிரமும் ஜீர்ணமாக முடிகிறது.

புது அரிசியா யிருந்தால் கஞ்சியுடன், கலந்து சேர்ந்தது போலத்தான் இருப்பேன். ஏனென்றால் அறுவடையி லிருந்து வந்ததும் என்னிட முள்ள சில வேண்டாத அம்சங்கள் எனது உஷ்ணப் பொருள்களைக் கரைத்து நீர் போல் ஆக்கி விடுகிறது. அதனால் தான் இந்த அதிகப்படிக் கஞ்சி. ஆனால் காலக்கிரமத்தில் இந்த வேண்டாப் பொருள் மடிந்து போகிறது.

இன்னொரு விஷயத்தையும் கவனியுங்கள். புதிதாக இருக்கும் என்னை நிரம்பச் சாப்பிட்டால் தான் பசியை அடக்க முடியும். பழகிப் போனபின் நான் வயிற்றில் அடைத்துக் கொள்ளும் இடத்தைவிட கொஞ்சமாகத்தான் புதிதாய் இருக்கும் போது அடைத்துக் கொள்வேன். ஆகையால் தான் புதிய அரிசியை நிரம்பப் புசிக்கும்படி ஏற்படுகிறது.

என்னை நீங்கள் சேமித்து வைக்கிறீர்கள் அல்லவா, அப்போது நான் எத்தகைய மாறுதல்கள் அடைகிறேன் என்பதைக் கவனித்துப் பாருங்கள். என் உஷ்ணப் பொருள்

களைக் கெடுக்கும் வேண்டாத அம்சங்கள் மறைவதல்லாமல், என்னிடமுள்ள சிறு துவாரங்கள் நாளடைவில் பெரிதாகி, சமைக்கும் போது நிரம்ப நீரைக் குடித்துப் பெருக்க முடிகிறது. என்னிடமுள்ள சத்துப் பொருள்கள் அதிகரிக்கின்றன.

என்னைக் குதிருக்குள்ளும், களஞ்சியங்களிலும் கொட்டி மேலேயும் கீழேயும் மூடி அடைத்து வைத்திருந்த போதிலும் நான் ஆனந்தமாக உயிர் வாழ்ந்து வருகிறேன். களஞ்சியங்களில் காற்று புகக்கூட இடம் கிடையாது. ஆனாலும் நான் மூச்சு விட்டுக் கொண்டு வாழ்ந்து வருவது உங்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறதோ?

என்னைக் களஞ்சியத்தில்கொட்டி என் உஷ்ணம் வெளியே போய் விடாதபடி கெட்டியாய் துவாரங்களை மண்ணால் அடைக்க வேண்டும். அதிகமான உஷ்ணம், என்னிடம் ஏற்படக்கூடிய புரட்சிக்கு அனுகூலமாக இருக்கும். உஷ்ணத்தைக் கொடுக்காத குதிர்களில் நெல்லை ஒரு வருஷம் கொட்டி வைத்திருந்தால் கூட ஒரு பிரயோஜனமும் இல்லை.

எனது ஒரு அங்கமான நெல்லூர்ச் சம்பாவை உபயோகித்திருப்பீர்களே? அறுவடையான துமே நெல்லூர்ச் சம்பா சாப்பாட்டிற்குத் தகுதியானது. ஏனென்றால் நெல்லூர்ச் சம்பா போன்ற உஷ்ண காலங்களில் உண்டாகும். பயிர்கள் சேமிப்பை அதிகம் வேண்டுவதில்லை

சேமிப்பு முறைக்கு அதிகப் பணம் செலவில்லாமல் போனாலும் ரொம்பக் காலதாமதம் உண்டாவதால் வெகு பேர்கள் இதில் கவனம் செலுத்த வில்லை. நீங்கள் ஏரோப்ளேன், டெலிவிஷன் என்று இயந்திரங்களெல்லாம் கண்டு பிடிக்கிறீர்களே; நீங்கள்உயிர்வாழ்வதற்குக் காரணமான நான் எவ்வளவு சீக்கிரத்தில் சேமிப்பு மாறுதல்களை அடையலாம் என்ற விஷயத்தை ஆராய்ந்தீர்களா?

என்னைப் புழுக்கி விட்டால் சேமித்து வைப்பதால் உண்டாகும் பலன்களை அடையலாம் என்று சிலர் நினைக்கிறார்கள். சேமித்து வைப்பதால் உண்டாகும் மாறுதல்களுக்கும் புழுக்குவதால் உண்டாகும் மாறுதல்களுக்கும் வித்தியாசங்கள் இருக்கின்றன. ஆனால் இரண்டினாலும் ஏற்படக் கூடிய பலன்கள் ஒன்றுதான் என்று தோன்றுகிறது. எங்களுக்கில்லாத, ஆனால் உங்களுக்கு மட்டும் இருப்பதாகச் சொல்லப்படுகிற மூளையைக் கொண்டு இந்த விஷயத்தைக் கொஞ்சம் ஆராய்ச்சி பண்ணுங்களேன்.

---

வலை வீச்சு

# ஜன நாயகம்

"லண்டன் மெர்க்குரி" என்ற மாதாந்தரப் பத்திரிகையில் இ. எம். பார்ஸ்டர் என்ற ஆங்கில நூலாசிரியர் "என் நம்பிக்கை" என்ற தலைப்பின் கீழ், அரசியல் முறைகள் பலவற்றுள்ளும் ஜனநாயகமே மேல் என்பதற்குச் சில காரணங்கள் கூறுகிறார்.

"தற்காலத்தில் வழங்கும் மற்ற அரசியல் முறைகளைப்போல் ஜனநாயகம் அவ்வளவு வெறுக்கத்தக்கதாக யில்லை. அதனாலேயே நாம் அதை பலப்படுத்த வேண்டியிருக்கிறது. தனி மனிதனின் மனுஷ்ய யத்தனம் முக்கியம், பல தினுசுகள் சேர்ந்தால்தான் ஒரு நாகரிகம் ஏற்படும் என்ற கருத்துக்களை அதற்கு அடிப்படை. உத்தேசித்த காரியத்திலேயே கண்ணாயிருந்து வேறு எவ்வித நலங்களையும் கருதாத அரசாங்கங்கள் தங்களுக்குட்பட்ட பிரஜைகளை ஆடுகள், ஆடு மேய்ப்பவர்கள் என்ற இருவகையாகவே பிரிக்கிறார்கள். அப்படி ஜனநாயகத்தில் நடப்பதில்லை. உணர்ச்சி மிகுந்து, கற்பனையிலும் ஆராய்ச்சியிலும் ஆவல் கொண்டு, அதிகார வாழ்வே வாழ்வு என்ற அசட்டு நினைப்பு சற்றும் இல்லாதிருப்பவர்களை நான் பெரியோரென மதிக்கிறேன். அப்பேர்க்கொத்தவர் முயற்சிகளுக்கு ஜனநாயகத்தில் வசதி கிடைப்பது போல் வேறு எந்த ஆக்ஷியிலும் கிடைப்பதில்லை. இவர்கள் மத ஸ்தாபகர்களாய் (சின்ன மதமோ, பெரிய மதமோ அவசியமில்லை) இருக்கலாம்; காவியங் கலைகளில் தேர்ந்து கற்பனா சக்தி வாய்ந்தவர்களாய் இருக்கலாம். சுயலாபத்தை எதிர்பாராத விஞ்ஞான ஆராய்ச்சியில் அமர்ந்தவர்களாய் இருக்கலாம்; கேவலம் 'சாமான்யர்' என்று

உலகத்தாரால் எண்ணப்பட்டும், தங்கள் சொந்த வாழ்க்கையில் குழந்தைகளை ஒழுங்காக வளர்ப்பது, பிறருக்கு அனுகூலமாயிருப்பது என்ற வகையில் கற்பனைத் திறனைக் காட்டுகிறவர்களாகவும் இருக்கலாம். இவர்கள் எல்லோரும் தம் மனப்போக்கை யொத்து நடந்து கொள்வதற்குச் சமூகம் இடந்தர வேண்டும். அந்த சௌகரியம் ஜாஸ்தி ஜனநாயக சமூகத்திலேதான் காணலாம்.

"தவிர, ஜனநாயகத்தில் இன்னொரு நன்மையும் உண்டு. குற்றத்தைத் கண்டு குறைசொல்லும் உரிமையை அங்கே கையாளலாம்; அப்படிப் பொது ஜனங்கள் காட்டவேண்டிய கவனம் குறைந்தால் ராஜாங்கத்தில் அக்கிரமம் நடப்பதும் அதை மறைப்பதும் சாதாரணமாய்விடும். இதுகாரணம் பற்றியே, பல பத்திரிகைகள் பொய்யையும் காலித்தனத்தையும் கைக் கொண்டாலும், பத்திரிகைகளும் அவசியம் பார்லிமெண்டும் அவசியம் என்பது என் கொள்கை. பார்லிமெண்டில் வம்புப் பேச்சுத்தானே என்று சிலர் இகழ்கிறார்கள். அப்படி ஓயாமல் பேசுவது தான் அதன் மஹிமை. ராஜாங்கத்தில் சம்பந்தப்படாத அங்கத்தினர் அதிகாரிகளைக் குளவியாய்க் கொட்டவேண்டும். 'பயித்தியக்காரன்' என்றும் 'விஷயம் தெரியாதவன்' என்றும் அவர்கள் அலக்ஷியமாய்ப் பேசப்பட்டாலும், அவர்கள் எடுத்துக் காட்டுவதால்தான் அநேக அநியாயங்கள் வெளிப்படுகின்றன; அப்படி வெளியாவதாலேயே தீர்க்கவும் படுகின்றன. சில சமயங்களில் அதிகார வர்க்கத்தினர், நல்ல எண்ணத்தோடு, நினைத்த காரியத்தைக் கடைப்பிடிக்கும் வேகத்தில் தலைகால் தெரியாமல் தான் ஈசுவராம்சமென்று எண்ணிவிடுகிறார்கள். பார்லியமெண்டில் கேள்விகள் பிறக்குமேயென்ற பயமிருந்தால் நிதானிப்பார்கள். எல்லா வகுப்பினருக்கும் பார்லியமெண்டு இடந்தருவதென்றும் காரியம் சாதிப்பதில் சீர்மை வாய்ந்ததென்றும் சொல்ல முடியாதாயினும், அது குற்றங்கூறி மறைபொருளாகக் கிடப்பதை சதிருக் கிழுப்பதாலும், அதன் நடவடிக்கைகள் விஸ்தாரமாகப் பிரசுரிக்கப்படுவதாலும் பெருத்த உபகாரம் ஏற்படுகிறது."

---

(32 பக்கத் தொடர்ச்சி)

**அக்டோபர் 7.**

நல்ல வேளையாக ஜெர்மன்—ஸெக் எல்லைப்புற சம்மந்தமான தகராறு தீர்க்கப் படுகிறது. ஸெக்கும் பிரான்சும் படைகளைக் கலைக்கின்றனர். ஹிட்லர் ஜெர்மானியர் தாங்கள் கௌரவத்தை மீண்டும் அடைத்துவிட்டதாகச் சொல்லி சந்தோஷப் பட்டுக்கொள்கிறார். இதே சமயத்தில் பிரிட்டிஷ் பார்லிமெண்ட் சேம்பர்லேன் செய்தது சரிதான் என்று தலையை ஆட்டுகிறது. சர்ச்சில் மட்டும் "ஐயோ இப்படி நாம் தோல்வியடைந்தோமே." என்று பிரலாபிக்கிறார்.

திருவாங்கூர் விஷயமாக காந்திஜியுடன் சமஸ்தான காங்கிரஸ் தலைவர்கள் கடிதப் போக்குவரத்து நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

ஹிந்துஸ்தானியை கட்டாயமாக்குவதில் மாணவர்கள் ஒன்றும் ஆட்சேபனை செய்யவில்லையென்று மயிலாப்பூர், ரானடே கட்டடத்தில், டாக்டர் சுப்பராயன் சொல்கிறார்.

அக்டோபர் 3.

ஸூடடன் நாட்டின் இரண்டாவது பகுதியை ஹிட்லர் விழுங்கி ஏப்பம் விடு கிறார். ஹிட்லர் ஸூடடன் தேசத்தில் விஜயம். பார்லிமெண்டில் எதிர்க் கட்சி யார் சேம்பர்லேனுக்கு 'சவுக்கடி' கொடுக் கிறார்கள்.

திருவாங்கூர் திவான்பேரில் கூறிய குற்றச்சாட்டுகளை வாபஸ் வாங்கிக் கொள்ளும்படி மகாத்மா காந்தி சமஸ்தான காங்கிரஸுக்கு உபதேசிக்கிறார்.

* * *

அக்டோபர் 4.

டெல்லியில் கூடிய தொழில் மந்திரிகள் மகாநாடு தேசத்தில் தொழில் அபிவிருத் தியை ஆராய ஒரு தேசீயத்திட்டக் கமி ஷன் அமைக்கத் தீர்மானிக்கிறது.

திருவாங்கூரிலும் ராஜ்கோட்டிலும் தடி யடி தர்பார் மும்மரம்.

வங்காள ராஜீயக்கைதிகளை விடுவிக்கும் விஷயம் பற்றி மகாத்மாகாந்திக்கும் வங் காள மந்திரி ஸர் நாஜிமுடீனுக்கு நடந்து வந்த கடிதப் போக்குவரத்துக்கு விடுதலை அளித்து பத்திரிகைகளில் பிரசுரம் செய் திருக்கிறார்கள்.

காரியக்கமிட்டி டாக்டர் கரேயைக் காங் கிரஸை விட்டு 'கல்தா' கொடுக்கிறது.

ஐரோப்பாவில் ரொம்ப விநோதங்கள்! ஆங்கில-பிரஞ்சு சிநேகம் பற்றி பிரஞ்சு பிரதமர் டலாடியர் பேசுகிறார். இரண்டு தேசங்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்றும் இரண்டு தேசமும் கட் டிக்கொண்டி அழவேண்டிய சந்தர்ப்பம் எதிர்காலத்தில் அடிக்கடி உண்டாகுமென் றும் கூறுகிறார். பிரிட்டன் ஸெக்கோ வுக்குச் செய்த வஞ்சகத்தையும் அதனால் பாஸீஸத்திற்கு வலுக் கொடுத்ததையும் பற்றி நேரு லண்டனில் பேசுகிறார்.

* * *

அக்டோபர் 5,

டாக்டர் கரே மென்னியைப் பிடித்துத் தள்ளினால்கூட தாம் சட்டசபை ஸ்தா னத்தைக் காலி செய்ய முடியாது என் கிறார்.

பிரதம மந்திரியின் வெற்றிகரமான கடப்பை மதுவிலக்குச் சுற்றுப் பிரயா ணம். திருப்பதியில் ஹரிஜனங்களுக்குக் கோவிலைத் திறந்துவிட வேண்டுமென் றும், இல்லாவிட்டால் எல்லோரும் ஹிந்து மதத்திலேயே நம்பிக்கையை இழப்பார்க ளென்றும் எச்சரிக்கிறார்.

திருவாங்கூர் காங்கிரஸ் சட்டமறுப்பை வாபீஸ் வாங்கிக்கொண்டால் எல்லா ராஜீய கைதிகளையும் விடுதலை செய்வதாகவும், சமஸ்தான காங்கிரஸின் மேல் போட் டிருக்கும் தடையை நீக்குவதாகவும், ஸர் ஸி. பி. தெரிவிக் கிறார்.

பம்பாயில் விமானங்களிலிருந்து குண்டு போடுவதைத் தடுக்க வெகு சுறு சுறுப் பாய் ஒத்திகை நடத்துகிறார்கள்.

பிரிட்டிஷ் பார்லிமெண்டில் சூடான விவாதம் நடக்கிறது. பிரிட்டன் இனி மேல் ஜெர்மனியுடன் கொஞ்சிக் குலாவ வேண்டுமென்றால் பிரிட்டிஷ் பொதுஜனங் களைக் கேட்டுக்கொண்டுதான் செய்ய வேண்டும் என்று சில அங்கத்தினர்கள் சொல்கிறார்கள். ஆனால், பால்ட்வின் சேம்பர்லேனை ஆதரித்து முட்டுக் கொடுக் கிறார். செக்கோஸ்லோவோகியாவில் ஸிரோவியின் கீழேயே மந்திரி சபை மாறுவதைக் காண்கிறோம். ஜப்பானியர் சைனாவின் தலைநகரின்மேல் குண்டு வீசு கிறார்கள்.

* * *

அக்டோபர் 6.

மறுபடியும் ஐரோப்பாவில் குழப்பம்! ஸூடடன் எல்லைப்புற விஷயமாக தகராறு ஏற்படுகிறது. ஜெர்மானியர், இந்த விஷ யத்தில் ரொம்பக் கறாராக இருப்பதால் நிலைமை படுமோசமாக ஆகிவிட்டது என்று ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் சொல்கிறது.

பிரிட்டன் செக் தேசத்திற்கு ஒரு கெடுதலும் செய்யவில்லை என்று ஸர். ஜான் ஸைமன் சத்தியம் செய்கிறார்!

காந்திஜி பெஷாவரை அடைந்ததும் எல்லைப்புற சுற்றுப் பிரயாணம் ஆரம்ப மாகிறது.

(31-ம் பக்கம் பார்க்க)

# பலாச்சுளை

"ரஸிகன்"

தங்கம்மாள் தன் வீட்டின் முன் தாழ்வாரத்தில் பலாப்பழத்தில் சுளை எடுத்துக் கொண்டிருந்தாள். நல்ல தஞ்சாவூர்ப்பழம்; சுளை பெரிதாயும், தங்க நிறமாயுமிருந்தது; கூறுக்கு இருபது இருக்கும். வைத்திநாதய்யர் தன் தகப்பனார் சிராத்தத்திற்கென்று, தஞ்சாவூருக்கு ஈரங்கிக்குப் போயிருந்த விடத்தில் அதை வாங்கிக்கொண்டுவந்தார். ஒரு பாதி தேவைக்கு உபயோகப்பட்டது. மறுநாள் மத்தியானம் பாக்கியை சாவகாசமாய் ருசிபார்ப்பதின் நிமித்தம், வீட்டு எஜமானி தானே சுளை எடுத்துக்கொண்டிருந்தாள். அரிவாள்மணைக் கொருபுறம் ஒரு கிண்ணத்தில் கொஞ்சம் எண்ணை இருந்தது. பிசின் கையில் ஒட்டாமல் இருப்பதற்காக அதில் அடிக்கடி விரலை துவைத்துக்கொண்டு சுளைகளை எடுத்து இன்னொரு புறம் போடப்பட்டிருந்த பெரிய நுனி இலையில், சுளைகளை ஒரு ஏட்டிலும், கொட்டைகளை ஒரு ஏட்டிலுமாகப் பிரித்து வைத்துக்கொண்டிருந்தாள். ஆனால் அம்மாள் எடுக்கும் சுளைகளில் சராசரி இரண்டுக்கு ஒன்றுதான் இலைவரையில் எட்டும். மற்றது நடுவழியில் ஞாபக மறதியாய் அவள் வாய்க்குள் விழுந்துவிடும்.

இப்படி மும்முரமாய்க் கையும் வாயும் வேலை செய்யும் தருணத்தில் வாசலில் குழந்தைகள் சத்தம் கேட்டது. தங்கம்மாள் சட்டென்று கிட்ட இருந்த அருக்கஞ்சட்டி ஒன்றைக் கவிழ்த்து இலையை மூடிக்கொண்டாள். இரண்டு குழந்தைகள் உள்ளே ஓடி வந்தார்கள். இரண்டு பேருக்கும் அநேகமாய் ஒரே வயதுதானிருக்கும்-நாலு நடக்கிறதோ நிரம்பிவிட்டதோ, தெரியவில்லை. "அம்மா, பலாப்பழ வாசனையடிக்கறதே, எனக்கில்லையா?" என்று கேட்டுக்கொண்டு வந்த முதல்குழந்தை நல்ல சிவப்பு, சிரித்த முகம். இடுப்பில் பட்டுக் கயிற்றில் தங்கச் சலங்கை கட்டியிருந்தது. காலில் வெள்ளிக் காப்பு, கழுத்தில் தங்கச் சங்கிலியில் கோர்த்த தாயத்து. பின்னால் வந்த குழந்தைக்கு இடுப்பில் ஒரு கறுப்புக் கயிறும், அதில் ஒரு தேய்ந்தநாய்க் கொடியும் தவிர வேறு ஆபரணம் ஒன்றுமில்லை. அவன் தன் சிநேகிதனுடன் தாழ்வாரத்தில் ஏராமல் இடைக்கட்டுக் கதவு நாதாங்கியைப் பிடித்துக் கொண்டே நின்றான். தங்கம்மாள் தன் குழந்தையிடம் இரண்டு பெரிய சுளைகளைக் கொடுத்து, "அவ்வளவுதான். ஒடம்புக்காகாதுரா, கண்ணே" என்று சொல்ல, "நாராயணனுக்கு?" என்றான் அக்குழந்தை. "ஆமாம், அவாத்திலே தினம் பழம் வாங்கினபடியே தானேயிருக்கா" என்று முணுமுணுத்துக்கொண்டு, சூள் கொட்டிவிட்டு, உள்ளதுக்குள் சிறியதாயிருக்கும் இரண்டு சுளைகளை அரைமனதாக எடுத்து 'இந்தாடா' என்று கூப்பிட்டு அக்குழந்தையிடம் கொடுத்து, "ஓடு, இருட்டிப் போச்சு, இம்மே நாளைக்கு விளையாடலாம்" என்று கொஞ்சம் அதட்டிச் சொன்னாள்.

அவன் அதை வாங்கிக்கொண்டு வெளியே செல்லும்போது, திண்ணையில் உட்கார்ந்து புஸ்தகம் பார்த்துக் கொண்டிருந்தவைத்திநாதய்யர் அகமுடையாளைக் கூப்பிட்டு, "இன்னும் நாலு சுளை கொடுக்கப் படாதோ, நமக்குத்தானா வயிறு? நேத்திக்கு வேண்டிய மட்டும் தின்னாச்சு. அவனண்டெ ஒரு கூறு கொடு" என்று சொன்னார். அதைக் கேட்டு, திரும்ப ஆவலாய் உள்ளே சென்ற அந்தக் குழந்தையினிடம் முக்கால் வாசி சுளை எடுத்த ஒரு கூறை ஒரு இலைக்கிழிசலைப் போட்டு மூடி, "இந்தாடாப்பா, உத்தரவாய்ட்டுது, என்னவோ கொட்டி வச்சிருக்காப்லெதான்" என்று சலிப்புடன் கொடுத்து, அய்யர் அதைக் கையில்வாங்கிப் பார்க்காத வண்ணம் அந்தக்குழந்தையை வாசற்படி வரையில் கொண்டுவந்து விட்டுவிட்டு உள்ளே சென்றாள்.

தேத்தாரம்பட்டி அக்கிரகாரத்தில் வைத்திநாதய்யர் தான் பணக்காரர். வெகு நாள் குழந்தை யில்லாமலிருந்து எவ்வளவோ கோயில் குளங்களுக்குச் சென்றும், விரதங்கள் இருந்தும் அருந்தவப் புதல்வன் பிறந்தான். எப்பொழுதும் குழந்தைகளிடம் அன்புள்ள அவருக்குத்

தனக்கு ஒரு புத்திரன் உண்டானதி லிருந்து பிறர் குழந்தைகளிடம் இரட்டிப் பான பிரியம் ஏற்பட்டது. அவர் மனை வியோ என்றைக்கும் குழந்தைகளைக் கண்டால் கரிப்பவள். வெகுநாள் கழித் துத் தான் ஒரு பிள்ளை பெற்றதில் ஏதோ ஒரு அசாதாரணமான காரியத்தைப் பண்ணிவிட்டவள் போல அகமகிழ்ந்தாள். தன் குழந்தை தெய்வப் பிறப்பென்றும் மற்றக் குழந்தைகள் மண்ணைப் பிசைந்து பண்ணப்பட்டனவென்றும் எண்ணினவள் போல், அவர்களோடு சேராமல் கிருஷ்ண மூர்த்தியைப் பொத்திப் பொத்தி வளர்த் தாள். எக்காலத்திலுமே நல்லது பொல் லாதது ஒன்றுக்கும் பிறர் வீட்டை எட் டிப் பாராத அவள், தன் குழந்தை இரண்டு மூன்று பிராயம் ஆகி வீடு தாண்டி வெளியே போக ஆரம்பித்ததும், அவன் மற்ற வீடுகளுக்குச் செல்லாமலும் மற்றக் குழந்தைகளோடு சேராமலும் மிருக்க எவ்வளவோமுயற்சி பண்ணினுள்.

வைத்திநாதய்யருக்கு அவள் காரியம் கொஞ்சமும் பிடிக்கவில்லை. "ஒன்னைப் போல அவனையும் ஓரியாயடிக்கப் பார்க்க ரயா' என்று எரிந்து விழுவார். அவளோ "இந்த ஊரிலேருக்கற தெருத் தரப் பொணங்களுக்கு அஸிகையும் ஆங் காரமும் கணக்கில்லெ. கொழந்தையைக் கண்ணுலே சுட்டுடும். அய்யோ! கொழந்தை களாங் கொழந்தைகள்! மூக்கொழுகரதும், நாக்கொழுகரதும், கண்டா வாயிலெ டுக்கவரது. தொட்டாலே அழுக்கு ஒட்டிக்கும் போலேருக்கு!" என்றெல் லாம் உதாசீனமாய்ப் பேசுவாள். ஆனால் கிருஷ்ணமூர்த்தி அவள் கட்டுப்பாட்டுக்கு முற்றிலும் அடங்கவில்லை. தெருக்கோடியி லுள்ள கூரைவீட்டு நாராயணனும் அவ னும் இணைபிரியாத தோழரானார்கள். இது தங்கம்மாளுக்கு சற்றுக்கூடப் பிடிக் காமல் போனாலும் அவள் ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஏனெனில் நாரா யணன் தகப்பனர் வைத்திநாதய்யருக்கு ஒன்று விட்ட மருமகன். தவிர, அச்சிறு வயதிலேயே நாராயணன் வெகு சமர்த் தாகவும் கருத்தாகவும் இருந்தான். இது காரணங்கள் பற்றி தன் குழந்தை அவ னேடு பழகுவதில் அய்யருக்கு நிரம்ப சந் தோஷம். நாராயணனேடு பழகுவதால் கிருஷ்ணமூர்த்தி வேறு தோழர்களைத் தேடாமலிருப்பதிலிருந்து தங்கம்மாளும் தொலைந்துபோகட்டு மென்றிருந்தாள்.

நாராயணன் தன் வீட்டை நோக்கி பழத்தைத் தூக்கிக்கொண்டு விரைந்து சென்றான். போகும்போது தனக்கு என்றுகொடுத்த இரண்டுசிறு சுளைகளையும் ஒன்றன்பின் ஒன்ருய் வாயில்போட்டுக் கொண்டான். தேன்மாதிரியிருந்தது. அவ னுக்கு அதுவரையில் பலாப்பழ ருசி தெரி யாது.

அவன் பெற்றோர் பரம ஏழைகள். அதிலும் தகப்பன் ஆகாவழி. நேராய்ச் சம்பாதிப்பதற்குச் சக்தி முன்பின் இருந் தாலும் உடம்பு வணங்குவதில்லை. ஊரூ ராய், கலியாணம் எங்கே, கல்லடுப்பு எங்கே என்று தண்டச்சோறு தின்பதும், பொய்ச்சாக்ஷி சொல்லிக் காப்பிச் சிலவு செய்வதும், ரங்காட்டம் ஆடுவதுமாகக் காலம் கழித்துவந்தான். மாதத்தில் ஒரு நாள் அரைநாள் வீட்டுக்கு வருவது அபூர்வம். கால் அரை கொண்டுவந்து கொடுத்தால் கொடுத்தான். இல்லாத போனுல் அவன் ஸம்ஸாரம், பாவம், வாயைத் திறக்கப்படாது. திறந்தால் அறை தான். அந்த உத்தமி எப்பாடோபட்டு தனக்கும் தன் குழந்தைக்கும் வயிறு வளர்ப்பதற்கு வேண்டியது தேடிக் காலந் தள்ளி வந்தாள். அவள் நல்ல புத்தி சாலி. ஏழைவீட்டுப் பெண்ணுயிருந்தும் பிறரை இரக்கும் தன்மை கிடையாது. அவள் கை நாலு காரியமும் செய்யும். சற்றுநேரம்கூட வெருமனே யிருக்கமாட் டாள். வம்பு வளர்க்க அவளுக்குப் பொழுதும் இல்லை, இஷ்டமுமில்லை. இத னலேயே அவளைக் கண்டால் தங்கம் மாளுக்கு ஆவதில்லை. தங்கம்மாள் ஊரி லுள்ள பெண்கள் அவ்வளவு பேரும் தனக்கும் தன் பணத்துக்கும் அடிமை கள் என்றும், தன் உத்தரவை எதிர் பார்த்தவண்ணம் இருக்கவேணுமென்றும் எண்ணங்கொண்டவள். "கூப்பிட்ட கொர லுக்கு ஏன்னு கேட்டாத்தானே ஏதாவது ரெண்டு கறியோ, காயோ, கையிலே ஆப்பட்டதைக் கொடுக்கத் தோணும்" என்று கூறும் அவளுக்கு ஸதா சுசுரூஷை செய்யப் பத்துப்பேர் காத்திருப்பார்கள். பகல் முழுவதும் அப்பளம் இடுவதோ,

முறுக்குச் சுற்றுவதோ, தோசைக்கரைப் பதோ இன்னும் வேறு என்ன வேலை இடுவளோ அதைச் செய்துவிட்டு, அரைப் படி ஊளமோர், நாலு அவிசல் கத்திரிக் காய், ஒரு வாழைப்பூ, இவ்வித சன்மானங் களைப் பெற்று மகிழும் அந்த ஏழைகளைத் தங்கம்மாள் சுக்ரீவாக்கினை பண்ணுவாள். இதெல்லாம் ராதையிடம் பலிக்கவில்லை என்பதுதான் அவளுக்கு அந்தப் பெண்ணிடம் உள்ள வெறுப்புக்கு அடிப்படை. அவள் அநாவசியமாய் தங் கம்மாள் வீட்டுக்கு வருகிறதில்லை. தன் கணவனுக்கு உறவினர்கள் என்று அவர்க ளிடம் எவ்வித ஒத்தாசையும் எதிர்பார்ப்ப தில்லை. அவள் படும் சிரமத்தைப்பார்த்து வைத்திநாதய்யர் ஏங்கல் தாங்கலுக்கு ஏதாவது கொடுத்தால் அதையும் வேண் டாமென்பதில்லை. தங்கம்மாளுக்கு அதைக் கொடுக்காமல் தடுக்கத் தைரிய மில்லை. ஆகிலும், அய்யர்காதில் விழாமல் தன் அடிமைகளிடம், "கிளப்புக்காரிபொண் ணுக்கு ராங்கியிலே கொறச்சலில்லே. தவுடு திங்கறதிலெ ஒய்யாரம்!" என்று குரோதவார்த்தை சொல்லி, தன் வயிற் றெரிச்சலை ஆற்றிக்கொள்வாள்.

வீட்டுக்குள் நுழையும் போதே, "அம்மா, கிஷ்ணமூர்த்தி ஆத்திலே பலாப்பழம் கொடுத்தா, ரொம்ப நன் னருக்கு" என்று சொல்லிக்கொண்டு வந்த குழந்தை தாயாரைக் காணமல் சமயலறைக்குள் சென்றான். அடுப்பில் பானையில் சோறு கொதித்துக்கொண் டிருந்தது. மினுமினு என்று ஒரு தகர விளக்கு எரிந்துகொண்டிருந்தது. தாயார் அசைவற்று எரியும் அடுப்பை நோக்கி யிருந்ததைக் கண்டு அவள் கவனத்தைக் கலைக்கக்கூடாதென்று தானும் உட்கார்ந்து ஒரு தூணில் சாய்ந்து கொண்டான். பலாப்பழத்தைத் தாயாருக்குக் கொடுக்க வேண்டுமென்றிருந்தாலும், தனக்குத் தெரியாமலே கை சுளையைத் தேடிற்று. இரண்டொரு சுளையே இருந்த தால் அவனுக்குச் சட்டென்று அகப்பட வில்லை. அவனுக்கிருந்த அவசரத்தில் நீண்டு, தடித்திருந்த தாளைப் பிய்த்து வாயில் போட்டுக்கொண்டான். "சே, இது தித்திப்பேயில்லியே, அந்த அம் மாமி கொடுத்தது கல்கண்டா யிருந் ததே" என்று ஏமாந்தவன்போல் சொல்ல, அதுவரையில் எதையோ நினைத்துக் கொண்டு மௌனமாயிருந்த அவன் தாய், திரும்பிப் பார்த்து, "அதை இங்கே கொண்டா பார்ப்போம்" என்று சொல்லிப் பலாப்பழக் கூறைக் கையில் வாங்கி விளக்கு வெளிச்சத்தில் பார்த் தாள். அளிந்து, கையால் குளசப்பட்ட இரண்டு மூன்று சின்னச் சுளைகள் தாளால் மூடப்பட்டு மறைந்து கிடந் தன. மற்றதெல்லாம் வெறும் தாளே. தன் குழந்தை முகத்தைப் பார்த்தாள். பழத்தில் ஆவலும், தன் தாய் நல்ல நல்ல சுளைகள் எடுத்துக் கையில் கொடுக் கப் போகிருள் என்ற நம்பிக்கையும் அவன் கண்ணில் ஜொலிக்கக்கண்ட அவள் வயிற்றை துக்கம் அள்ளிப் பிடுங்கிற்று. "அய்யோ, இப்படிக் குழந்தையை ஏமாத்துவாளா ஒரு பாவி" என்று சொல்லி பலாக்கூறைக் கீழே போட்டு விட்டு, நாராயணனை வாரிக் கட்டிக்கொண் டாள். கண்களிலிருந்து ஜலம் தாரை தாரையாக வந்தது.

இதைக் கண்ட நாராயணன் 'விக்கிச் சாப்போல்' வாயைத் திறக்கவில்லை, அவன் சொற்ப வயதுக்குள்ளாகவே ஏழ்மையின் கொடுமையை நன்கறிந்த வன். பட்டினி பசியை அவன் அதிகமாக லட்சியம் பண்ணுவதில்லை. ஆயினும், ஒரு நாள் கிருஷ்ணமூர்த்தி முந்திரிப் பருப்பு உருண்டை ஒன்றில் ஒரு பாதி தனக்குக் கொடுக்க அதை வாங்கித் தின்று அவன் அந்த ருசியில் ஈடு பட்டு வீடுவந்ததும் தாயை, "அம்மா, நம்பாத்திலே நீயேன் முந்திரிப் பருப் புருண்டை பண்ணல்லெ? கிஷ்ண மூர்த்தி யாத்திலே பண்ருளே ரொம்ப நன் னருக்கே" என்று கேட்டான். அதற் கவள், "அவா பணக்காரா, மிந்திரி தோப்பாய்க் காய்க்கறது. நாம்ப எங்கே போரதுரா, அப்பா"? என்று அதி விசனமாய்ச் சொன்ன சொல் அவன் உள்ளத்தில் பதிந்தது. அதிலிருந்து தாயாரை இதுவேணும், அதுவேணு மென்று கேட்பதை நிறுத்திவிட்டான். இன்றைக்கும் பலாச்சுளை இல்லை யென்று கண்ட அவன் வாய்திறக்க வில்லை. தாய் மடியில் படுத்தபடியே

சற்று நேரத்திற்கெல்லாம் தூங்கிவிட்டான். ராதை அடுப்புக் கட்டையை இழுத்து வெளியே போட்டுவிட்டுக் குழந்தைக்கருகே படுத்துக்கொண்டாள். கண்ணீரும் கம்பலையுமாக வெகுநாழிகை தன் விதியை நினைத்து வருந்தி அவளும் கண் அயர்ந்தாள்.

எவ்வளவு நாழிகை தூங்கியிருப்பாளோ தெரியாது; திடீரென்று விழித்துக்கொண்டாள். யாரோ வாசற் கதவை அவசரமாய்த் தட்டும் சத்தம் கேட்டது. விளக்கை யெடுத்துக்கொண்டு போய்க் கதவைத் திறக்க, அங்கே வைத்திநாதய்யர் நிற்பதைக் கண்டு திடுக்கிட்டாள். எப்பொழுதும் தன்னுடன் பேசாத அவர், "குழந்தைக்கு உடம்பு சரிப்படவில்லை, அம்மா, வாயிலெடுக்கிறது, வயிற்றாலும் போரது. எனக்கு ஒண்ணும் புரியல்லெ, சித்தெ வாயேன்" என்றார். அர்த்தராத்திரி, வீட்டிலோ குழந்தை ஒண்டியாய் தூங்குகிறான். வைத்திநாதய்யர் மூஞ்சியை மறுபடி நோக்கினாள். அதில் கண்ட துக்கமும் பயமும் அவளுக்கு மனம் சகிக்கவில்லை. அடுத்த வீட்டுக் கிழவி தெருத் திண்ணையில் படுத்திருந்தாள். தூக்கமில்லாமல் கொக்கு கொக்கென்று இருமிக்கொண்டிருந்த அவளிடம் குழந்தையைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு அய்யர் பின்னே அவர் வீட்டை நோக்கி வேகமாய்ச் சென்றாள்.

மார்கழி மாதம், பொசபொசவென்று தூறல் விழுந்துகொண்டிருந்தது. ஒவ்வொரு வீட்டுக்குள்ளிருந்தும் குசுகுசு என்று பேச்சுக் குரல் காதில் விழுந்தது. ஆனால் ஒருவரும் கதவு திறக்கவில்லை, வெளிச்சம் காட்டவுமில்லை. அப்பொழுதுதான் வைத்திநாதய்யர் தன்னைத் தேடிவந்ததின் உண்மையை அவள் ஊகித்தாள். என்ன நடந்ததென்றால், காலராக் காலமானதாலும், கிருஷ்ணமூர்த்திக்கு வயிற்றுப்போக்கு, வாந்தி இரண்டும் இருப்பதைக் கவனித்த அடுத்த வீட்டு ஸ்திரீ பரதேசித் தபாலில் இந்தச் செய்தியை ஊர் முழுவதும் ஒரு நொடியில் பரப்பி, அது காலராதான் என்று ஊர் ஜிதப் படுத்தி விட்டபடியாலும், இரண்டு மூன்று வீட்டுக் கதவைத் தட்டித் தங்கம்மாள் கையாள்களை வைத்திநாதய்யர் கூப்பிட்டுப் பார்த்தும் அவர்கள் அசந்து தூங்குபவர்போல் பாசாங்கு செய்தார்கள். விஷயமென்ன என்று தெரிந்த பிறகுதான் ராதையை அவர் வந்து கூப்பிட்டது.

வீட்டுக்குள் எல்லாம் ஒரே அலங்கோலமாயிருந்தது. தலையாட்டம் கண்ட சமையற்காரக்கிழவி வெந்நீரில்பிளானலைப் பிழிந்து பிழிந்து கிருஷ்ணமூர்த்தி வயிற்றிலும், முதுகிலும் ஒத்திக்கொண்டிருந்தாள். அவன்,உடம்பு கிடை கொள்ளாமல், இங்கு மங்கும் புரண்டும் முக்கிக் கொண்டும், மிரண்டு விழித்துக் கொண்டும், சற்றுக் கொருதரம் "அய்யோ, வயத்தவலி தாங்கமுடியல்லையே" என்று அலறிக் கொண்டு மிருந்தான். தங்கம்மாள் தலை விரிகோலமாய்த் தூணில் சாய்ந்துகொண்டு "எந்த மகாபாவி கண் பட்டுதோ, யார் சாபம் பலிச்சுதோ, எங்கொழந்தையெ நான் எங்கே இம்மேக் காணப்போறேன்? அட பகவானே, எனக்குச் சாவு வரப் படாதா, என் கொழந்தை நன்னாயிருக்கப் படாதா?" என்று வாயில் வந்தபடி யெல்லாம் புலம்பிக் கொண்டிருந்தாள். ராதையைக் கண்டதும், "அடி, அம்மா, ராதே, நீ நல்ல பொண், ஒனக்கு கொழந்தை வயித்தியமெல்லாம் நன்னா தெரியுமுன்னு சொல்லிருக்காளே, எங் கொழந்தை பொழெப்பனா சொல்லேன்!" என்று வெகு தீனமாயும் வணக்கமாயும் அவளைக் காலைப் பிடிக்காத தோஷம் கேட்டாள். இதைப் பார்த்ததும் தன் மனதில் ஒன்றுக்கிரண்டாய்க்கிளம்பின வெறுப்பை ஒருவாறு அடக்கிக்கொண்டு, "பகவான் பேரிலே பாரத்தைப் போட்டுப் பேசாமே யிருங்கோ, ஒண்ணும் கெடுதல்நேரிடாது" என்றுசொல்லி ராதைகுழந்தையின்ஸ்திதியைக் கவனித்தாள். அவளுக்குக் கலியாணமாவதற்குமுன்,மருத்துவத்தொழில் புரிந்து காலக்ஷேபம் செய்து வந்த தன் தாய் (இவளைத்தான் தங்கம்மாள் 'கிளப்புக்காரி' என்று அவதூறாய்ச் சொன்னது) இம்மாதிரி சந்தர்ப்பங்களில் செய்யும் சிகிச்சைகளை நன்கு கவனித்துத்தெரிந்தவளாதலால், யோசனை தடுமாற்றம் ஒன்றில்லாமல், வேண்டிய காரியங்களைச் சமையற்காரக் கிழவியின் உதவியைக் கொண்டு செவ்வனே செய்தாள். அவள் ஊகித்த படியே பலாச்சுளை ஜரிக்காததால் வந்த

கோளாறுனதால், வசம்பு முதலிய சில சரக்குகள் சேர்த்துச் சுட்டுக் கருக்கு வைத்துக் கொடுத்த கொஞ்ச நேரத்திற் கெல்லாம் குழந்தைக்கு குணம் கண்டது. கண்ணயர்ந்தான். அவன் கத்தல் கனையல் கொஞ்சம் குறையவே தங்கம்மாளும் குறட்டைவிட ஆரம்பித்தாள். அய்யர் ரேழியிலும், ராதை கூடத்திலும் கண் கொட்டவில்லை.

பொழுது விடிந்தது. உடம்பு தேவலை என்று தெரிந்த ஊரார் பலர் மும்முரமாக விசாரணை செய்ய வந்தார்கள். உள்ளூர் நாட்டு வைத்தியன் அவசரமாய் வந்து குழந்தை கையைப் பிடித்துப் பார்த்து விட்டு, "ஒண்ணுமில்லெ, கொஞ்சம் மந்த மாருக்கு. ரெண்டு வேளெ மருந்து கொடுத்தாப் போரது" என்று அபிப்பிராயம் கொடுத்ததைக் கேட்டு அவனே தன் குழந்தைக்குப் புத்துயிர் கொண்டு வந்ததாக எண்ணி, ஒரு ரூபாயும் படியரிசியும் அவனுக்குஅளந்து கொடுத்துவிட்டு தங்கம்மாள் வீட்டுக்குள் சென்றாள். அப்பொழுது, ராதை இனிதான் அங்கிருக்கத் தேவையில்லை யென்று வீட்டுக்குப் போகக் கிளம்பி எதிர்ப்பட்டாள். அவளைப் பார்த்ததும்,'சித்தெ இரு' என்றுசொல்லி தாழ்வாரத்துள்ளுக்குள் பாய்ந்து பலாப்பழத்தில் பாக்கியுள்ள ஒரு கூறை எடுத்துக்கொண்டு வந்து, "இந்தா, நல்ல பழம், ஒனக்குன்னு வச்சிருந்தேன்" என்று தாராளமும் அன்பும் ததும்பும் குரலில் சொல்லிக் கையை நீட்டினாள். "வாண்டாம், அம்மாமி, நீங்க நேத்திக்கி குழந்தை கிட்டக் குடுத்து அனுப்பிச்ச பழத்தைச் சாப்பிட்டு எனக்கு வயர் நரஞ்சு போச்சு" என்று சொல்லி, ராதை ஒரு சிரிப்பு சிரித்தாள். "அடி, அது ஒனக்குக் கொடுக்கல் லியே, கொழந்தைக்குன்னு......" என்று ஏதோ பசப்ப ஆரம்பித்த தங்கம்மாள் மேலே வாயெடுக்கவொட்டாமல், "அது கடக்கு, நாழியாச்சு, ஆத்துக்குப் போரேன்" என்று சொல்லி, ராதை விர்ரென்று வீட்டுக்குப் போய்விட்டாள்.

அடுத்தவாரம் வைத்திநாதய்யர் வீட்டில் சுமங்கலிப் பிரார்த்தனை நடைபெற்றது. அதற்கு தங்கம்மாள் காலிறங்கின புடவை வாங்கிப் பிரார்த்தனை செலுத்தி யாருக்குக் கொடுத்தாள் தெரியுமா? ஆமாம், ராதைக்குக் கொடுப்பதாகத்தான் கிருஷ்ணமூர்த்திக்கு உடம்பு சரிப்படாத தினம் தான் வேண்டிக்கொண்டபோது தீர்மானித்திருந்தாள். ஆனால் புடவையை வாங்கிக் கட்டிக்கொண்டவள் தங்கம்மாளுக்கு இடைவிடாமல்'லோட்டா'ப்போடும் தோசைக் குப்பன் பாரியை லோகாம்பாள். அதற்கு ஒரு காரணமும் தங்கம்மாள் தன் கோஷ்டியில் பிரசாரம் பண்ணினதாகத் தெரிய வந்தது. "நல்ல சாப்பாட்டுக்கு நாக்குச்செத்துக் கடக்கேன்னு அஸலான பலாப்பழம் ஒரு முழுக்கூறு குடுத்தேண்டீ, இரவது சொளெருக்கும். அது வாண்டான்னுட்டு, எரிஞ்சிட்டுப் போய்ட்டாளே, அவராங்கியும் தெரிப்பும்! அவ புள்ளே கண்ணுன்னு எங்கொழந்தைக்கி அப்படி உடம்புக்கு வந்தது. பெரியவா பண்ணின புண்ணியம் தலைக்கு வந்தது தலப்பாவோடே போச்சு" என்றாளாம்.

---


## அறிவிப்பு

"பாரதமணி" வாரப்பதிப்பு இந்தியா, இலங்கை, பர்மா முதலிய விடங்களிலுள்ள பத்திரிகை ஏஜண்டுகளிடம் கிடைக்கும். சென்னை நகரில் எல்லா டிவிஷன்களிலுள்ள பத்திரிகை ஏஜண்டு கடைகளில் கிடைக்கும். உங்களுக்குப் "பாரதமணி" இதழ் கிடைக்க ஏதாவது அசௌகரியப்பட்டால் மானேஜர், பாரதமணி, 7, வடக்கு மாடவீதி, மைலாபூர் சென்னை என்ற விலாசத்திற்கு ஒரு கார்டு எழுதிப் போடுங்கள். பாரத மணியை விற்க விரும்பும் ஏஜெண்டுகள் மானேஜருக்கு விண்ணப்பம் செய்து கொள்ளலாம்.

மானேஜர்


## ஆசிரியர் அறிக்கை

"பாரத மணியில்" பிரசுரிக்க வேண்டிய சிறு கதைகள், கட்டுரைகள், கவிதைகள் முதலியவைகளை ஆசிரியர் "பாரதமணி" 7, வடக்கு மாடவீதி, மைலாப்பூர், சென்னை என்ற விலாசத்துக்கு அனுப்பவேண்டும். எளிய நடையில் காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதப்பட்ட கட்டுரைகளைத்தான் ஏற்றுக் கொள்ளப்படும். அங்கீகரிக்கப்படாத கட்டுரைகளைத் திருப்பி அனுப்பத் தபால் தலை ஒட்டிய கவர் வைத்து அனுப்புதல் அவசியம்.

ஆசிரியர்.

# கஞ்சா மடம்

(ந. பிச்சமூர்த்தி)

"அம்பலத்தரசே அருமருந்தே சம்போ
ஆனந்தத்தேனே அருள்விருந்தே சம்போ."

என்று பண்டாரம் பாடிக்கொண்டிருந்தார். அவருடைய சிஷ்யப்பிள்ளை இடதுகையிலிருந்த கஞ்சா இலையை வலது கையால் கசக்கி முகத்தைச் சுளித்துக்கொண் டிருந்தான். எதிர்த்தாப்போல் அரை வட்டமாய் உட்கார்ந்திருந்தனர் நான்கு ஐந்து பண்டாரங்கள். கசக்கி முடிந்ததும் கஞ்சா சிலுமிக்குள் சென்றது. சிலுமி *கைகள் மாறிற்று.குப் குப் என்று சுருள் சுருளாய்ப் புகைப் படலம் எழுந்தது. பரமசிவத்தின் நாமங்கள் படலத்தின் நடுவே நடுவே அனாயாசமாய் எழுந்தன. அது பிரும்ம லோகம்.

'ஞணங் ஞணங்' என்று நெருங்கி வந்து கொண்டிருந்தது மணிகளின் சத்தம்! முடிவில் அது அன்னக் காவடியாகவும் அதைத் தூக்கி வந்த ஆண்டியப்பனாகவும் விளங்கிற்று. அன்னக் காவடியைக் கண்டதும் அடியார் கூட்டத்தில் பெருத்த பரபரப்பு உண்டாயிற்று. ஆண்டியப்பன் அன்னக்காவடியிலிருந்த கூடையை எடுத்துவைத்து,ஒவ்வொரு சாமியாருக்கும் சோற்றையும் குழம்பையும் சேர்த்துப் போட்டான். ஆண்டியப்பன் போடுவானேனென்றால், திருக்கூட்டத்தில் சேருபவர்கள் சில சில்லரைக் கடமைகளையும் வழக்கங்களையும் ஏற்றாலன்றி, ஞானமார்க்கத்திற்கு அருகதை யாவதில்லை என்பது அவர்கள் சித்தாந்தம். கூட்டத்தாரின் பசிப்பிணியை ஆற்றும் வேலை மகேசுவரனின் சேவையல்லவா? பெரிய பண்டாரங்கள் சாப்பிட்டு முடிந்தது.

ஒரு சேமங்கலம் ஒலித்தது. வெள்ளை வேஷ்டிகளைத் தூயதாய்த் துவைத்துக் கட்டிய சிஷ்யப்பிள்ளைகள் நான்கு ஐந்து பேர் வந்து கூடினார்கள். கூடையில் மிஞ்சியிருந்ததை ஆண்டியப்பன் உள்பட எல்லோருமாக ஒழித்துவிட்டு, கூடையை சுத்தம் செய்து சுவற்றில் மாட்டினார்கள்.

திரும்பவும் பெரியபண்டாரங்கள் சிலுமியை எடுத்து புகை இழுத்தார்கள்: முதலில் இழுத்தது பசிப்பதற்காக. திரும்பவும் இழுத்தது ஜீரணத்தைத் தூண்டுவதற்காக. திரும்பவும் புகைப்படலம்! கால் மணிக்குள் பெரிய பண்டாரங்களெல்லாம் 'தினப்பிரளயத்தில்' மூழ்கிப்போய் விட்டார்கள். இளம் வல்லரசுகளும், முற்றிய அனுபவசாலிகளான இரண்டொரு கிழச் சாமியார்களும் விழித்திருந்தனர்.

ஒரு சிறு பண்டாரம் பேசத் துவங்கினான். "மூந்தாநாள் சிவகஞ்சா சாப்பிட்டதில் ரொம்ப சுந்தாகிப் போயிடுச்சு. பிரதோஷ காலமாச்சேன்னு நடேசரைத் தெரிசனம் பண்ணக் கிளம்பினோம். இப்போ எல்லாம் ராத்திரிலே விளக்கு போடறதில்லையாம், மூலைக்கு மூலை ராத்ரியிலே வண்ணாத்திப் பூச்சி பறக்கிறது. அதுகளிலேருந்து வெளிச்சம் கொட்றதைப்போல சந்திரன்கூட கொட்ரதில்லே. ரொம்ப ரொம்ப ஜோராயிருக்கு! நாங்க கோயில் கோபுரத்துக்கிட்டே போகறப்போ சட்டி சாமிக்கு கேரி முத்திப் போச்சு. என்ன பேசித்து தெரியுமா? 'புண்யாத்மாக்களே! தலையைக் குனுஞ்சுகிட்டு கோபுரவாசலிலே நுழையுங்க. இல்லாட்டி கோபுரம் இடிக்கும்' என்று சொல்லி தானே தலையைக் குனிஞ்சுகிட்டு நுழைஞ்சுச்சு. தெருவிலே போன ஜனங்ககூட இடி இடின்னு சிரிச்சுது. அப்புறம் சுவாமி தரிசனம் பண்ணிக்கிட்டு சட்டிசாமியை இழுத்துகிட்டு தேனீ பறக்கறாப்போல நேரே மடத்துக்குத் திரும்பிவந்தோம்.

"பொல்லா கதை சொல்றாரு சின்னச் சாமி. பண்டாரம் தத்வம் பேசணும், பழகணும். சமாதி இன்னாத் தெரியுமா?" என்றார் கிழச் சாமி ஒருவர்.

"சொல்லட்டுமா?" என்றான் ஒரு இளைஞன்

"ஹூம்."

"அது ஒரு தூக்கம்."

"அப்படி பேசப்படாது."

"ஏன்? பம்பரம் வேகமாய் சுத்தரப்போ அது தூங்குதுன்னு சொல்றோமல்ல. அந்த மாதிரி ஒரு நிலை."

"கொர்! புர்ர்! கொர் புர்ர்!"

"அடெடெ! கிழச்சாமி பேசிகிட்டே தூங்கிப்போயிடுச்சுடா."

பெரிய பண்டாரத்துக் கோஷ்டியில் சேர்ந்த கிழவனும் கடைசியாய் தூங்கிய பிறகு சிஷ்யர்கள் கஞ்சாக் கடையை விரித்தார்கள். மடத்துக்குப் பக்கத்தில் ஆற்றோரமாய் இருக்கும் தாழ்வாரத்தில் உட்கார்ந்தார்கள். ஜோல்னாவைத் தேடிப்பார்த்ததில் சரக்கைக் காணோம்.

---

* கஞ்சா புகைபிடிக்கும் சிறு மண்குழாய்.

"ஆண்டியப்பா! சரக்கு இல்லையே, கொஞ்சம் சம்பாரிச்சு கொண்டா "அதெல்லாம் எனக்குவேணும்,"

"இது வேண்டாட்டி அங்கே ஞான வெட்டி தூரக்காது. கபாடம் அடைஞ்சுதான் கிடக்கும். நாங்க இத்தைக் குடிச்சப்புறம் தானே பாதி வழி போக முடிஞ்சுச்சு."

ஆண்டியப்பன் அதை உண்மையாகவே நம்பிவிட்டான். சட்டி சாமியார் ஜோல்னுவை தேட்டை போட்டு கொஞ்சம் சரக்கு கொண்டு வந்து விட்டான். சின்ன கோஷ்டி இரண்டு மூன்று தரம் தம் அடித்தது- தோழர் கள் வற்புறுத்தலுக்கு இணங்கி ஆண்டியப்ப னும் இரண்டு மூச்சு கஞ்சா அடித்து விட்டான்; சரியாக புகைவிடத் தெரியாத நிலையில் புகையை விழுங்கிவிட்டான். அவ் வளவுதான். அதற்குப் பிறகு இன்ன நடந்த தென்று தெரியாது, ஆனல் வாய்மட்டும் ஓயா மல் பேசிக்கொண்டிருந்தது.

"சமாதி இன்னு பேசினுங்களே! பம்பரம் இன்னு என்னென்று இவுங்களுக்குத் தெரியுமான்னு கேக்கறேன்...? இதோ கிடக்கல்ல பம்பரம்..."

"இங்கே ஏதப்பா பம்பரம்?"

"அடெ! கண்ணுகூடத் தெரியல்லே?"

"நல்லாத் தெரியுது. கஞ்சா நெஞ்சுலே போய் செய்யற வேலே."

"தெரியுதா? அப்படி வாங்க வழிக்கு. திருமூலர் சொல்றுரு,

மரத்தை மறைத்தது மாமர யானை,

மரத்தில் மறைந்தது மாமர யானை.

மரம் இன்ன ஒடனே பம்பரம் ஞாபகம் வருது. மொதல்லே ஒரு தோட்டமிருக்குது. அதுக்கு ஒரு சொந்தக்காரன் இருக்கான்."

"தோட்டம் முதலா சொந்தக்காரன் முதலா?"

"அட, இரு அப்பேன்! கோழி முதலா முட்டை முதலா என்கிற சண்டைக்கு அப்புறம் வாரேன். இந்தப் பம்பரம்......இந்த பம்பரம்...... என்ன சொன்னேன்......அது போகட்டும்...... தோட்டக்காரன் பொறக்கறப்பொ தோட்டத்தை இடுப்பிலா சொருகிக்கிட்டு வந்தான். போறப்பவும் எடுத்துக்கிட்டு போகமுடியாது. காதறுந்த ஊசியும் வாராது காண் கடைவழிக்கே. இந்த மாதிரி நிலேயிலே சொத்து, சுதந்திரம்னு எந்த முட்டாள் பய கல்பனே பண்ணி வெச்சானே தெரியல்லே! போகட்டும். மரம் தான் இவன் வெச்சுப் பயிராக்கினுை? இல்லே. தானே முளேக்கிறது. அப்ப ஒரு மொதலாளி வந்து அந்த மரத்தை வெலே வச்சு எட்டு ரூபாய்க்கு எடுத்துக்கிட்டு போறுன்...நான் கேக்கறேன்... மழைத் தண்ணி, காத்து வெயில், பூமாதேவி, தானே முளேக்கிற மரம் இவ்வளவுக்கும் வெலே வச்சு எதுக்காக நில சொந்தக்காரனுக்குக் கொடுக்க வேணுமின்னு தெரில்லே. ஆனு இதுகூடத் தேவலாம்போல இருக்கு. அடுத்த மவராஜனே நினேச்சுக்கிட்டா.

"அவன் மரப்பட்டறை வெச்சிருக்கான். இந்த மரத்தை வாங்கிக்கிண்டு வந்து தச்சனே வெச்சு வண்டிக்குடம், நாற்காலி இவ்வளவும் பண்ணச் சொல்லிவித்து லாபம்தட்ரான்.மரத் துலே விழற துண்டை பம்பரமாய் பண்ணிக் குவிக்கச் சொல்றுன்.

அப்புறம் பம்பரம் கடைக்காரன் கிட்டே போய்ச் சேருது. அவன் எவனே ஒரு கொல்லனேப் பிடுச்சு ஒவ்வொண்ணுக்கா ஆணி அடிச்சு கடையிலே வைக்கறுன். பசங்க அள்ளிக்கிட்டுப் போயிடுறுன்கள். மரம் ஷாப்புக்கடையிலே பம்பரமாக மாறத்துக்குள்ளே பம்பரத்தின் வெலேயிலேஎன்னென்ன வறி உக்காந்து இருக்குன்னு எந்த மடையனுச்சும் யோசிக்கிறுை? மரப்பட்டரை மொதலாளி முதல்,லாபம். அப்பறம் ஷாப்புக்கடை மொதலாளி ஒடைய கடை வாடகை, லாபம், வசூலாகாத கடன், கடை முதலுக்கு வட்டி, பெண்டாட்டி நகையின் விலே, தர்மச் செலவு இவ்வளவும் சேர்ந்து உக்காந்து இறுக்குது. உபயோகப்படாத மரத்துண்டுக்கு அதிருஷ்டம் அடிக்குது.

விலேயை மறைத்தது பம்பரம் உருவம்! திருமூலர் திருமந்திரம் அவ்வளவும் தங்கக் கட்டி. இக பரலோக தத்வங்களே எப்படி சுருங்கச் சொல்லி விளங்கவச்சிருக்காறு!...

நூறிலுரைத்தது மெய்ஞ்ஞானந் திரு

மூலருணர்ந்ததுவே ஞானம்......"

"சரிதான் ஆண்டியப்பா நிறுத்து பம்பரத்தின் கதையை."

"இல்லியே திருமூலரைப் பத்தியல்ல சொ......ல்......விக்......கிட்......டி.....ருந் தேன்..."

கொர்......கொர்......

"ஆண்டியப்பன் தகரடப்பா மூடிப்போச்சுடா. அவன் என்னமோ பம்பரத்தைப் பத்தி சொன்னுனே இன்னும் விஷயம் கொஞ்சம் கூட இருக்கிறது, அவனுக்குத் தெரியாது போலிருக்கு. திருமூலர் இன்னுனே, அழுகுணி சித்தர் அழரூர் பார், அப்பிடி அழரூர்! அதை விட எனக்கு அழுகைவந்தூட்டது பாத்துக்க. என் கிட்டெ ஒரு மரக்கட்டைப் பம்பரம் இருந்துச்சு. அது எப்படி எங்கிட்டெ வந்துச்

சுன்னு. என் கிட்டெ ஒரு முழு மயிலிறகு இருந்துச்சு. ஒருத்தன் கிட்டெ குடுத்தூட்டு இதெ வாங்கிக்கிட்டேன். கொஞ்சநாள் வெளையாடினேன் அப்பறம் ஆணி விழுந்தூடிச்சு, மூலையிலே போட்டுட்டேன்.

"ஒரு பத்து நாள் கழிச்சு நானும் தங்கச்சியும் திண்ணையிலே குந்திட்டிருந்தோம். அடுத்த வீட்டு சுக்கரமணியன் ஒரு பம்பரத்தைக் கொணுந்து சவுக்காய் விட்டான். எனக்குப் பம்பரம் உடணும்னு ஆசை. அதெ வாங்கி ஆடினேன். தங்கச்சி கேட்டா ஒன் பம்பரம் எங்கேனுட்டு. இதோ விளையாடறேனே இதுதான் இன்னேன். ஆணி கழண்டு போய் பம்பரத்தை உள்ளே போட்டிருந்தேன் சுக்கரமணியன் எடுத்துக்கிட்டுப் போய் ஆணி போட்டு வச்சிருக்கான் போல இருக்குது."

'ஏண்டா அப்பிடித்தானு சுக்கரமணியா' இன்னுள் தங்கச்சி.

'எனக்கு பம்பரம் அம்புட்டுச்சு. அரையணு செலவு செஞ்சு ஆணி போட்டேன். இப்பொ ஒங்க பம்பரம் ஆவுமா?'

"என் தங்கச்சி ஏண்டா பம்பரத்தைத் திருடினே இன்னு அவனைக் கேட்டாள். அவன் பம்பரத்தை எடுத்துக்கினு அழுதுகினே ஓடிப்போயிட்டான். அதிலேயிருந்து களே பாரமாய்ப் போச்சு. எங்க வீட்டுப் பொம்பிள்ளேங்களுக்கும் அவுங்க வீட்டு பொம்பிள்ளேங்களுக்கும் லடாய்...வாய்ச் சண்டை, கூச்சல். அப்பறம் கைச்சண்டை வரும் போலாயிடுச்சு. நல்ல வேளையா ஆம்பிள்ளேங்க வந்து சேந்தாங்களேன்னு நினேச்சுக்கிண்டேன். படார் இன்னு கைகலந்து போச்சு. அப்பறம் போலீஸ், கச்சேரி, வக்கீல், இழவு, காடாத்து, என் மாமனுக்கு ஒண்ணரை மாசம் ஜெயில்...அதிலே எனக்கு சீ இன்னு போயிடுச்சு. சொத்து, சுதந்திரம் இதனலே தானே இவ்வளவு தும்பமும்! வரகோளாறெல்லாம் மனசாலே என்று நினேச்சுக்கிட்டே வீட்டெவிட்டுக் கிளம்பினவன் தான். திருக்கூட்டத்திலே சேர்ந்து பூட்டேன். அந்த பம்பரத்தின் கதையை இப்பொ நினேச்சுக்கிட்டாக் கூட அழுகை வருது...

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே

பூட்டைத் திறப்பதும் கையாலே—மனப்
பூட்டைத் திறப்பதும் மெய்யாலே
வீட்டைத் திறக்க முடியாமல் விட்ட
விதியி தென்கிருர் ஞானப்பெண்ணே!

என்று பாடிக்கொண்டே ஒரு பெரிய பண்டாரம் வந்தார்.

"எங்கடேன். என் ஜோல்னுப்பையைக் காணுமே!" என்ருர்.

சின்னப் பண்டாரம் ஒருவன் சொன்னுன்.

"சாமி படுத்துக்கிட்டு தியானம் பழகிச் சல்ல. ஆண்டியப்பனும் பழகணும்னு நினேச்சுகிட்டான். அவனைக் கேட்டால் தெரியும்—பை எங்கேன்னுட்டு."

சாமியார் திரும்பிப் பார்த்தார். ஆண்டியப்பன் அலங்கோலமாய் உட்கார்ந்தபடியே தூங்கிக்கொண்டிருந்தான். பக்கத்தில் பை கிடந்தது. திறந்து பார்த்தார். சரக்கே சுத்தமாய் இல்லை. ருத்ரன் வந்துவிட்டார். அடுத்த நிமிஷத்தில் ஆண்டியப்பன் தலையில் ஒரு குடம் ஜலம் விழுந்தது.

ஆண்டியப்பன் உதறிக்கொண்டு எழுந்தான்.

"குருவை கிட்டெவச்சுக்காமெ இந்த வித்தையெல்லாம் பழகாதே. இப்போ தலையிலே ஜலம் ஊத்தினேனே பொழச்சையோ. இல்லாட்டி..." என்று சொல்லிவிட்டுத் திரும்பிப் போனுர் பெரிய சாமியார். சும்மா போகப்படாதா?

கள்ளுண்டு தள்ளுண்டு நில்லாதே
பின் கஞ்சா உறக்கமும் கொள்ளாதே;
உள்ளுண்டு சோமக்கலையா தியானத்தை
ஊட்டுக் கும்மியடியுங்கடி.

---

மகான்கள் பெரும்பாலரும் குட்டையானவர்தான் என்று கணக்காளிகள் தெரிந்தெடுக்கிருர்கள். உதாரணமாக, வால்டேர், கேலிலியோ, அலெக்ஸாண்டர், பேஸ்கல், ப்ளேடோ, லேப்நிட்ஸ், மாண்ட்டெயின், விக்டர் ஹ்யூகோ, ஹாரஸ், அரிஸ்டாட்டில், நெப்போலியன், எடிஸன், பால்ஜாக், ஷேக்ஸ்பியர், மில்டன் இவர்களைச் சொல்லலாம். ஆனல் இதற்கு மாருக நல்ல உயரமாயிருந்த சில மேதாவிகளும் உண்டு; இவர்களுள் முக்கியமானவர்கள் கெட்டே, ஸ்காட், பாஸ்டூர், பீதோவன்.

இரவில் திருடர் வந்தால் எச்சரிக்கை செய்பச் சாதாரணமாக நாய்களை வைத்துக்கொள்ளுகிருேம். அவைகளைக் கட்டிவிட்டுத் தான் படுக்கும் அறையில் வைத்து வீட்டுக்காரன் தூங்குவது வழக்கம். மூச்சு விடாமல் சத்தம் செய்யும் அவை அந்நியர் உள்ளே வந்தால் உடனே சத்தத்தை நிறுத்திவிடும். இப்படி திடீரென்று சத்தம் ஓயவே வீட்டுக்காரன் விழித்துக்கொள்ளுவான்.

# எங்கள் ஊர் ரேடியோ

(சிட்டி)

"இன்னமுதைக் காற்றினிடை எங்கும் கலந்ததுபோல்" என்று ஒருவர் பாடினார். அவர் பெயர் சுப்பிரமணிய பாரதியாம். அவருக்காகத்தான் சில வாரங்களுக்கு முன் தமிழ் நாடு முழுவதும் அமர்க்களப் பட்டது. பாவம், அவர் இம்மாதிரி பாடும் போது ரேடியோ கிடையாது போலிருக் கிறது. இருந்திருந்தால் இப்படிப் பாடி விட்டு, "காசி நகர்ப் புலவர் பேசுவதைக் காஞ்சியிற் கேட்க" வேண்டுமென்று கனவு கண்டிருக்கமாட்டார். இது அவருடைய நம்பிக்கையையும் தைரியத்தையும் தான் காட்டுகிறது. இப்பொழுது அவர் உயி ரோடிருந்து, தினந்தோறும் ரேடியோ பாட்டுகள் கேட்கும் துரதிர்ஷ்டம் அடைந் திருந்தால், அவருடைய நம்பிக்கை எவ் வளவு தூரம் அவருக்குத் துணை செய்யும் என்பது சந்தேகம்தான். "நாவுக் காற்றை வெளியிட்டெங்கும் வாரி யிறைத்தது போல்" என்று பாடி யிருப்பாரோ என்னமோ!

நீங்கள் நம்பாவிட்டால் எங்கள் ஊருக்கு ஒரு நாள் வாருங்கள். "கிராம முன் னேற்ற" திட்டத்தின் பிரகாரம் எங்க ளூரிலும் ஒரு ரேடியோ வைத்திருக்கிறார் கள். ரேடியோ அங்குரார்ப்பணம் செய் யப்பட்டதே ஒரு பெரிய கதை. அதை எங்கே வைப்பது என்பதைப் பற்றி அபிப்பிராய பேதம் ரொம்ப பலமாயிருந் தது. இதனால் பெரிய கக்ஷிகள் தோன்றி விடுமோ வென்றுகூட நினைத்தோம். கடைசியில் வைக்கலாமென்று ஒருவர் சொன்னார். இந்த யோசனைக்கு ஊரி லுள்ள ஒரே காபி ஹோட்டலிலிருந்து பலமான ஆக்ஷேபணை வந்தது. அந்த ஹோட்டல்காரர் தன்னுடைய வியாபாரத் திற்கு, ஒரு பழைய கிராமபோனையும், காதர்பாட்சா, சுப்பையா பாகவதர் பிளேட்டுகளையுமே பக்க பலமாகக் கொண் டிருந்தார். ஒரு தனி மனிதனின் வியா பாரத்தோடு இந்திய சர்க்கார் போட்டி போடுவது அழகல்ல வென்று அவர் தீவிர மாய் வாதித்தார். ஊரில் முக்கால் வாசிப் பேர் அந்த ஹோட்டலில் கணக்கு வைத் துக் கொண்டிருந்ததால் அவருடைய ஆக்ஷேபணைக்கு மரியாதை கொடுக்க வேண்டியது அவசியமாய் விட்டது.

கோவிலுக் கெதிரில் வைப்பதென்ற யோசனையை சில சநாதனிகள் ரோஷத் தோடு உதறித் தள்ளிவிட்டார்கள். "என்ன அக்கிரமம், கோவில் கிட்ட ரேடியோவைப் போட்டு கண்டவன் காணாதவன் எல்லாம் வந்து கோவிலுக்குள் நுழையவா? திரு வாங்கூரில் கோவிலைத் திறந்துவிட்டு விட்டு இப்பொ அவா படற பாட்டைப் பாருங்கோ!" என்று ஒரு தீர்க்கதரிசி கர்ஜித்தார். பள்ளிக்கூடத்தில் வைப்ப தென்ற யோசனையும் கை கூடவில்லை. பையன்கள் பந்து விளையாடும்போது ரேடி யோவுக்கு சேதம் ஏற்படுமா, பந்துக்கு ஹானி நேருமா என்பது பரிக்ஷார்த்தமாக பார்க்கக்கூடிய விஷயமாயிருந்தது. தற் போதைய நிலைமையில் அம்மாதிரி பரி சோதனைகளுக்கு சந்தர்ப்பம் போதா தென்று முடிவு செய்யப்பட்டது.

ரேடியோ, கிராம முன்னேற்றத்திற் காகத்தானே ஏற்பட்டது, வயல் நடுவில் வைத்துவிடுவோமே என்று ஒருவர் நியாய மாகச் சொன்னதை ஒருவரும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. கடைசியாக ஆற்றுக்குப் போகும் வழியில், கிராமச் சாவடியில், ரேடியோவை தாற்காலிகமாய் வைத்தார்கள். ஓர் பொதுக் கூட்டம் போட்டு பிறகு ரேடியோவின் நிரந்தர ஸ்தானத்தை நிர்ணயம் செய்வோமென்று விட்டு விட்டார்கள்.

ரேடியோ பாட்டினால் நான் எவ்வளவோ கஷ்டப்பட்டிருக்கிறேன். ஆகவே ரேடியோ ஆரம்பித்ததிலிருந்து சுமார் ஒரு வாரம் ஆற்றுப் பக்கம் போவதையே நிறுத்தி விட்டேன். மனிதன் எத்தனை காலம்தான் துன்பத்திற்காளாகாமல் தப் பிக்க முடியும்! என்னுடைய வாழ்க்கைப் பேரேட்டில் கர்மக் கணக்கை எழுதவேண் டிய காலம் சீக்கிரம் வாய்த்து விட்டது. சென்னையிலிருந்து ஒரு நண்பர் வந்திருந் தார்.

அவர் ஆற்றுப் பக்கம் உலாவப் போகலாம் என்று சொன்னதை நான் ரொம்ப சாமர்த்தியமாக மாற்றிவிட்டு, ரயில்வே ஸ்டேஷன் பக்கம் இழுத்துக்கொண்டு புறப்பட்டேன். வழியில் ஒரு குடியானவன் எதிர்ப்பட்டான்.

"ரேடியோ வச்சிருக்காங்களாமே எங்கே?" என்று கேட்டான்.

"எனக்குத் தெரியாது" என்று நான் சுருக்கமாக பதில் சொல்லுவதற்கு முன் என் நண்பர் இடைமறித்தார்.

"ரேடியோ இருக்கா என்ன, இங்கே?" என்றார் ஆச்சரியத்துடன். சஹாரா பாலைவனத்தில் காபி ஹோட்டல் வைத்திருந்ததுபோல் அவருக்குத் தோன்றிற்று போலும்!

உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டிய சங்கடமான நிலைமை வந்துவிட்டது.

"போடா! இந்த ஊரிலேகூட ரேடியோவா? நீ சொல்லவே இல்லையே! அங்கேயே போகலாமே!" என்றார் நண்பர்.

நான் நண்பரைப் பின் தொடர்ந்தேன். குடியானவன் எங்களைப் பின் தொடர்ந்தான். அறிவு வளர்ச்சி விஷயத்தில் நானும் நண்பரும் குடியானவனுக்கு, கிராமவாசிக்கு, வழி காட்டிகளானோம். கிராம புனருத்தாரண சரித்திரம் எழுதப் படும்போது, என்னைப்பற்றி எவ்வளவு பக்கங்கள் எழுதுவார்கள் என்ற மகத்தான பிரச்னையை ஆராய்ந்து கொண்டே சென்றேன்.

சாவடிக்கு நூறு கஜ தூரத்தில் போகும் போதே எனக்கு ஆச்சரியமா யிருந்தது. ரேடியோவில் புதிய விஷயங்களெல்லாம் நடக்கின்றன என்று நினைத்தேன். ஆனால் அருகில் சென்றதும், நான் நினைத்தது தப்பு என்று தெரிந்தது. நான் கேட்ட ஓசை ரேடியோ ஸ்தாபனத்திலிருந்து வரவில்லை. சாவடிக்கு முன் இருந்த வேப்ப மரத்தில், அந்தி மங்கியவுடன் பறவைகள் வந்து சேர்ந்து, தங்களுடைய குடும்ப காரியங்களைப்பற்றி பேசிக்கொண்டிருந்தன. மரத்தின் கீழ் சுமார் நூறு சிறுவர்களும் சிறுமிகளும் தங்களுடைய பாஷைகளைப் பேசிக்கொண்டு, பறவைகளின் கூச்சலோடு போட்டி போட்டுத் தங்களுடைய சுதந்திரத்தையும் பிறப்புரிமையையும் ஸ்தாபித்துக் கொண்டிருந்தார்கள்.

ரேடியோ செட்டைச் சுற்றி பத்துப் பதினைந்துபேர் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். என்ன வேடிக்கை பார்க்கிறார்களென்று நெருங்கி நோக்கும்போது, அதிலிருந்து பாட்டு சப்தம் வெளி வருவது தெரிந்தது. யாரோ ஒரு வித்வான் வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தார். தம்முடைய பாட்டு எங்கள் காதில் விழக் கூடாதென்று பறவைகளும் குழந்தைகளும் ஒத்துழைத்துப் போராடியதைப் பற்றி அவருடைய அபிப்பிராயம் தெரிந்தால் ஸ்வாரஸ்யமா யிருக்கும்.

எங்களைப் பின்பற்றி வந்த கிராமவாசி என்ன பலனடைகிறான் என்று கவனித்தேன். அவனுக்காகத் தானே இந்திய சர்க்கார் கோடானுகோடியாய் ரூபாய் செலவழித்து ரேடியோக்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவனுடைய சுகத்தில் எழுந்த உணர்ச்சிகளை அவனுடைய முகம் காட்டவில்லை. வித்வானின் சாஹித்யத்தினால் கிராம புனருத்தாரணம் எவ்வளவு தூரம் முன்னேற்ற மடைந்து விட்டது என்பதை அவன் சிறிதும் உணராதது எனக்கு வருத்தமா யிருந்தது.

பத்து நிமிஷம் ஆயிற்று. "சித்திரமும் தத்துவமும்" என்ற விஷயத்தைப் பற்றி ஒருவர் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார். கலையின் வளர்ச்சி, பயிற்சி, தத்துவம் முதலியவைகளைப் பற்றி பொழிந்து தள்ளிக்கொண்டிருந்தார். அந்த சமயத்தில் குடியானவன் பிரசங்கத்தை கவனிக்காமல், வேறொரு குடியானவனோடு கேவலம் நாற்று நடுவதைப்பற்றி ஏதோ பேசிக் கொண்டிருந்தான். இந்த மாதிரி கிராமவாசிகள் ரேடியோவுக்கு செவி சாய்க்காமல் போனால், கிராம புனருத்தாரணத்திற்கு செலவழிக்கும் பணம் முழுவதும் வீணாய்விடுமே என்ற கவலை என்னை வாட்டிற்று. நமது கிராமவாசிகளின் நன்றியின்மையை நினைத்து வருந்தினேன். முன்னேற்றத்திற்காக ரேடியோ வந்த பிறகுமா பட்டிக்காட்டுத்தனமாய், விவசாயத்தைப்பற்றிப் பேசிக் காலம் கழிப்பது? "நெஞ்சு பொறுக்கு திலையே!"

நான் அவனையே கவனித்துக்கொண்டிருந்ததை உணர்ந்து குடியானவன் என் பக்கம் திரும்பினுன்.

"ஏனய்யா பிளேட்டு எங்கே வைக்கிருங்க?" என்ருன்.

அவனுடைய அறியாமையைக் கண்டு என் ரத்தம் கொதித்தது.

"இது கிராமபோன் இல்லெ அப்பா. பட்டணத்திலெ பாடுராங்க. அது இங்கே கேட்கிறது. கம்பி கிம்பி ஒண்ணும் கிடையாது. காற்று வழியா அந்த சப்தம் இங்கே வரும்" என்று வயர்லஸ் சாஸ்திரத்தில் அவனுக்கு முதல் பாடம் ஆரம்பித்தேன். இன்னும், ஏரியல் கரெண்ட், வேவ்லெங்த், கிலோசைகிள், பைசகிள் முதலியவைகளைப் பற்றி அவனுக்குச் சொல்ல வேண்டுமென்பது என் ஆசை. இந்திய சர்க்கார் கைக்கொண்ட இந்த மகத்தான மறு மலர்ச்சி வேலையில் என் பங்கை செய்ய வேண்டியது என் கடமையல்லவா?

ஆனுல் அந்தக் குடியானவன் என்னைப் பார்த்த பார்வை ஒரு மாதிரி இருந்தது. என் பிரசங்கத்தை நிறுத்தி விட்டேன். செக்கோஸ்லவோகியாவின் சுதந்திரத்தை பிரிட்டனும் பிரான்சும் அடாது மழை பெய்தாலும் விடாது காக்கும் என்று பெர்ஷிகாடனுக்குப் பறந்து சென்று சேம்பர்லேன் கூறியபோது, ஹிட்லர் இந்த மாதிரிதான் பிரிட்டிஷ் பிரதம மந்திரியைப் பார்த்திருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். குடியானவன் அந்த மாதிரி சுமார் 17 வினுடிகள் என்னைப் பார்த்துவிட்டு, "பட்டணத்திலெ பாடுராங்களோ? அது இங்கே கேக்குதாக்கும் .........?" என்ருன்.

எனக்கு பதில் சொல்ல தைரியம் வரவில்லை. வயர்லெஸ்ஸில் எனக்கு இருந்த நம்பிக்கையே மறைய ஆரம்பித்தது.

எனக்கு பக்க பலமாக என் நண்பரைக் கூப்பிடலாமென்று திரும்பினேன். அவர் வித்வான் மீண்டும் ஆரம்பித்த கீர்த்தனத்துடன் லயித்து தாளம் போட்டுக் கொண்டிருந்தார். குடியானவன் பக்கம் திரும்பினேன். அவனைக் காணவில்லை. திடீரென்று மறைந்து விட்டான். என்னைப் பற்றி அவன் எவ்வளவு சந்தேகம் கொண்டிருக்கிருனே கடவுளுக்குத்தான் தெரியும். எப்படியிருந்தாலும் அன்று அவன் ரேடியோ கேட்டதிலிருந்து அவனுடைய வாழ்க்கை எவ்வளவு தூரம் முன்னேற்றமடைந்திருக்கும் என்பதை ஆராய்வதாக நிச்சயித்திருக்கிறேன்.


# கசின் அண்டு கம்பெனி

**(COUSIN & CO.)**

உயர்தர மரச்சாமான்கள் தயார் செய்பவர்கள்

ஆபிஸ்களுக்கும், பாங்கிகளுக்கும்,
ஆஸ்பத்திரிகளுக்கும், வீடுகளுக்கும்

வேண்டிய **எல்லா நவீன** உயர்தர மரச்சாமான்கள்!

மிகக் குறைந்த விலையில் கிடைக்கும்.

இதர இடங்களுக்குச் செல்லுமுன் ஒரு முறை எங்கள் கம்பெனிக்கு விஜயம் செய்து பாருங்கள்!

**சாமான்கள் வாங்குமுன் எங்களை கலந்துகொள்ளுவது நலம்**
**எங்கள் கம்பெனி "பர்னிசர்கள்" உங்களுக்குப் பூர்ண திருப்தி அளிக்கும்.**

ஒர்க்ஷாப் :-
"சிடன்ஹாம்ஸ் கார்டன்ஸ்"
டிம்பர் டிபோ
தூளை.

ஆபிஸ், கம்பெனி பார்வையிடம்:-
17-18, பிராட்வே,
ஜி.டி., சென்னை.

# கவியின் மனோதிடம்

"தேவதத்தன்"

பல நூற்றாண்டுகளுக்கு முன் தாரா நகரத்தில் அரசுபுரிந்து வந்த போஜராஜனைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அவர் கொடையில் சிறந்தவர். கவிகளை ஆதரித்தவர். கவிச்சக்கரவர்த்திகளான காளிதாஸன், பவபூதி இவர்கள் அவர் ஸபையையே அலங்கரித்து வந்ததாகச் சொல்லப்படுகிறது.

இவ்விரு கவிகளில் யார் சிரேஷ்டர் என்ற கேள்விக்குச் சுலபமாய்ப் பதிலளிக்க முடியாது. இதைப்பற்றிப் பார்வதி தேவிக்கும் பரமேசுவரனுக்குமே வாக்குவாதம் இருந்ததென்றால் அதிலிருந்து இவ் விஷயத்தைப்பற்றி முடிவு செய்வது எவ்வளவு கடினமென்று நீங்களே தெரிந்து கொள்ளலாம். அந்த வாக்குவாதம் எவ்விதம் தீர்க்கப்பட்டது என்ற கதையைக் கேளுங்கள்.

மஹாதேவரும், பார்வதியம்மையும் தொண்டு கிழவரும் கிழவியும்போல் வேஷம்பூண்டு, கவிகள் ராஜசபைக்குப் போகும் பாதைக்கருகில் ஒரு ஆழமான குழியை ஏற்படுத்தினார்கள். கிழவர் அந்தக் குழிக்குள்ளும், கிழவி மேல் புறத்திலும் நின்று கொண்டார்கள். அரசனைக் காணக் கவிகள் அவ்வழியே வர ஆரம்பித்ததும், கிழவி தோல் சுருங்கி மங்கலடைந்த தன் கண்களில் நீர்ததும்ப, துக்கத்தில் மூழ்கினவள்போல் காணப்பட்டாள். கருணை நிறைந்த அந்தக் கவிகள் ஒவ்வொருவரும் இதுகண்டு பரிதபித்தார்கள். பரபரப்புடன், "ஏன் தாயே அழுகின்றனை?" என்று ஒருவர் கேட்க, தழதழத்த குரலில் அந்த அம்மை "இதோ, இந்தக் குழியில் விழுந்து கிடக்கிறவர் என் வயது முதிர்ந்த பதி. இருவரும் இரவில் இந்த மார்க்கமாய் வந்து கொண்டிருந்தோம். முன்சென்ற அவர் இருட்டில் கண் தெரியாமல் குழியில் விழுந்து விட்டார். பொழுது விடிந்ததும் இதைக் கண்ட சிலர் அவரைத் தூக்க முயன்றார்கள். அவர் அதைத் தடுத்து, தனக்கு ஒரு சுலோகத்தின் தத்துவம் விளங்காததால் அதைச் சிந்தித்துவழியைக் கவனிக்காமல் நடந்து அந்தக் குழியில் விழுந்ததாகவும், அந்த சுலோகத்தின் அர்த்தம் தெளிவுறத் தெரிந்தாலொழிய குழியிலிருந்து தான் வெளியேறுவதில்லை என்று பிரதிக்ஞை செய்திருப்பதாகவும் தெரிவித்தார். அந்தப் பாமர ஜனங்கள் சுலோகத்தின் கருத்தை என்ன கண்டார்கள்? ஆகையால் அவர்கள் ஒன்றும் செய்ய முடியாமல் போய் விட்டார்கள். உம்மைப் பார்த்தால் மகா கவி என்று தோன்றுகிறதே. நீர் அந்த சுலோகத்தின் பொருளை வெளிப்படுத்தி, கிழவரைக் கரையேற்றி எனக்கு மங்கிலியப் பிச்சை தாரும்" என்று வேண்டினாள்.

முதலில் வந்த கவி-"சுலோகம், என்ன, சொல்லுங்கள்" என்று கேட்டார். கிழவி அதைச்சொல்ல, கவி தனக்குத் தோன்றின பொருளைக் கூறினார். அது சாதாரணமாய் யாருக்கும் புலப்படக்கூடியதே. இதைக்கேட்டுக் கிழவி குழியின் ஓரம் சென்று உறக்கக் கூவி (அவருக்குக் காது கொஞ்சம் மந்தம்) தன் பதியைக் கூப்பிட்டு, சுலோகத்தின் பொருளைத் தெரிவித்தாள். அதற்கு அவர், "ஐயோ, அது அல்ல சரியான பொருள்" என்று தீன சுரமாய்ச் சொன்னார். அதைக்கேட்ட கவி, "சரி, எனக்குத் தெரிந்தது அவ்வளவு தான். என்னைவிட மேதாவிகள், பின்னே வருவார்கள். அவர்களைக் கேளுங்கள்" என்று சொல்லிப் போய்விட்டார்.

பிறகு தண்டி, பாரவி முதலான 'நவரத்னங்கள்' என்று வழங்கி வந்த மகாகவிகள் ஒருவர் பின் ஒருவராய் அவ்வழியே வர, கிழவி ஒவ்வொருவரையும் அந்தக் கேள்வியையே கேட்டாள். அவர்களும் அந்த விடையையே அளித்தார்கள். கிழவரும் அழுகுரலில் அது தப்பு என்று மறுத்து விட்டார். கவிகளும் தங்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான் என்று சொல்லித் தங்கள் வழியே சென்றார்கள். பவபூதி ஒருவர் மட்டும் சற்றுநேரம் தான் கூறின பொருளுக்கு வியாகரண சாஸ்திரத்திலிருந்து அநேக மேற்கோள்கள் எடுத்துக் காட்டிக் கிழவரைத் திருப்தி செய்யப்

பார்த்தார். கிழவர் ஒப்புக்கொள்ள வில்லை. "இந்தக் குழியில் கிடந்து பட்டினியால் சாகவேண்டியதுதான் போலிருக்கிறது. இப்படி பாரத நாட்டில் வித்தை குன்றிப் போகும் என்று நான் கனவிலும் நினைக்க வில்லையே!" என்று அவர் ஓலமிடத் தொடங்கினர். பவபூதி அவருக்கு ஆறுதலாய், "மகாகவி காளிதாஸன் இவ் வழியே வருவார். ஒருவேளை சரியான கருத்தை அவர் எடுத்துரைத்தாலும் உரைக்கலாம்" என்று சொல்லிச் சபைக் குச் சென்ருர்.

சற்று நேரத்திற்கெல்லாம் காளிதாஸன் வந்தார். அந்த அம்மையின் கதையைக் கேட்டுச் சிரித்து, "சே! இதற்காக உயிர் துறப்பது பெரிய அசட்டுத்தனமல்லவோ; சரி, என்ன அந்த அதிசய சுலோகம்? சொல்லுங்கள், கேட்போம்" என்ருர். கிழவி அதைச் சொல்ல, மற்ற கவிகள் கூறின பொருளையே அவரும் எடுத்துச் சொன்னர். "ஐயோ, அது தப்பாம். எவ் வளவோ பேர் அதைச் சொல்லியும் அவர் அது தப்பு என்று மறுத்து விட்டாரே" என்ருள் கிழவி. கவிக்கு வந்தது அடங் காக் கோபம். "இவ்வளவு சுலபமான சுலோகத்துக்கு அர்த்தம் தெரியாதது போக, தெரிந்தவர் சொல்வது தவறு என்று கக்ஷி சொல்லும் முட்டாள் இருப் பதிலும் இறப்பது சிலாக்கியம். அம்மா, நீங்கள் வருந்தாமல், சனியன் தொலைந்தது என்று வீட்டுக்குப் போங்கள்" என்று ஆத்திரமாய்க் கூறினர்.

பளீர் என்று ஒரு மின்னல் தோன் றிற்று. கவி திடுக்கிட்டார். கிழவர், கிழவி, குழி ஒன்றையும் காணும். விருஷபா ருடர்களாய் அயனும், அம்பிகையும், அவ ருக்குக் காட்சி புரிந்து நின்ருர்கள். தலை வணங்கிக் கைகூப்பி நிற்கும் கவியைச் சுட்டிக் காட்டி, "பார்த்தாயா, தேவி, இவனன்ருே கவி! மனேதைரிய மும், சந்தேகமற்ற ஞானமும், ஸமயோ சித புத்தியும் இருப்பவன் கவியே திற மடையும்" என்று ஈசுவரன் கூறினர். பிறகு கவியை ஆசீர்வதித்துத் தேவதேவர் கள் அந்தர்த்தானமானர்கள். இந்த வர லாற்றை யறிந்த பவபூதி முதலான மற்றக் கவிகளும் காளிதாஸன் மேன்மையை உணர்ந்து மெச்சினர்கள்.

---


## தி கமர்ஷியல் யூனியன் பாங்கி லிமிடெட்

நெ. 79, கீழாவணி மூல தெரு, மதுரை.

அதிகார மூலதனம் ... ரூ. 3,00,000

பொது ஜன சேவை செய்யும் பாங்கி இதுவே.
எல்லாவிதமான பாங்கிங் அலுவல்களும் கவனிக்கப்படும்.

### நீண்டகால பிக்ஸட் டிபாசிட்டுகள்
### &
### குறைந்தகாலத் தவணை டிபாசிட்டுகள்

செய்பவர்களுக்குச் சுலபமாயும், லாபகரமாயும் பணம் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்படும்.

**எஸ். ஜி. வாஞ்சிநாதய்யர்,**
(மானேஜிங் டைரக்டர்)

# நாளேர் பொன்னுழவு

(கோத்தமங்கலம் சுப்பிரமணியன்)

நமது கிராமங்களில், வருஷா வருஷம், பயிர்த்தொழிலை ஆரம்பிப்பதற்கு அறிகுறியாக "நாள் ஏர்ப்பூட்டுவது" என்று ஒரு விழாக் கொண்டாடுவது வழக்கம்.

அன்று வெள்ளிக்கிழமை ; ரேவதி நட்சத்திரமும் கூட. மாமரப்பட்டி நாட்டாண்மைக்காரன் பொன்னையத் தேவன் பேர் ராசிக்கும் பஞ்சமி திதிக்கும் நாள் நன்ருய்ப் பொருந்தியிருந்தது. பத்து நாழிகைக்கு முகூர்த்தம் பார்த்திருந்தார்கள். கிராமத்தானுக்குப் புது வருஷத்தில் முதல் திருவிழா இதுதான். அன்று அந்த ஊர் ஜனங்கள் எல்லோரும் அதிகாலையில் ஸ்நானம் செய்து விபூதி, குங்குமம், சந்தனம் அணிந்தவர்களாய், தலையில் முண்டாசுகளுடன், பிள்ளையார் கூடத்து வாசலில் நின்றிருந்ததைப் பார்த்தால், "எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்று பாரதி எழுதியது ஞாபகத்திற்கு வரும்.

சுழி, குளம்பு, நிறம், கால் முதலிய அங்க சுத்தம் பொருந்திய எட்டு அழகான காளைகள் நின்றுகொண்டிருந்தன. வழக்கம்போல, சுப்பையா ஆசாரி, அவசர அடியலில் அடித்துக் கொடுத்த புதுக் கலப்பை பொன்னையத்தேவன் தோளின் மேல் இருந்தது.

"ஏண்டா, ஊரெல்லாம் வந்தாச்சா?" என்று பொன்னையத்தேவன் கேட்டான்.

யார் யார் வந்திருந்தார்கள் என்பது அறுபத்தொன்பது வயதான அவனுக்கு நன்ருகத் தெரியும். ஆனாலும், இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் ஏற்படும் சில சிறிய தவறுதல்கள் கூட விபரீதமான பலனை உண்டாக்கிவிடும் என்று அவன் ஜாக்கிரதையாக இருந்தான்.

"ஓட்டுக்கும் வந்தாச்சு!"

"ஏண்டா, நேரம் வந்திருச்சாடா?"

"அய்யரு தான் சொல்லியிருக்காரே, அப்பரம், வராமெ இருக்குமா?" என்ருன் ராக்கன்.

"ஆச்சு. பத்து நாளியாச்சு, வாங்க, நல்ல நேரத்துலே—"

"ஆமடாய்யா, கௌம்புங்கடா! 'ஆதினங்காத்தான் நாடு செளிக்கவேணும், நல்ல மளெ பெய்யவேணும்' முனு வேண்டிக்கிங்க... அடெ லெ ராக்கா! மாடுகளைப் புடிசிக்கிட்டு வாடா!"

வாத்திய கோஷங்கள் முழங்கின. ராக்கன் வேளாளர்களின் விருதுகளைப் பிடித்துக்கொண்டு முன் சென்ருன். 'எருதுடையான் வேளாளன்' என்று காகனுர் கூறுகிருர்.

நாளேர்ப் பூட்டுவது கிராமத்தலைவன். கிராமப் பொதுப்பிள்ளையார் மடத்துக்குச் சொந்தமான மானிபச்செய்யில் கலப்பை பாய்ச்சுவது வழக்கம். முதல் முதலாக இந்தப் பொன்னேர் பூட்டி உழுத பிறகு தான் மற்ற விவசாயிகள் உழவு ஆரம்பிப்பார்கள்.

கூட்டம் வயலுக்குப் போய்ச் சேர்ந்தது. பொன்னையத் தேவன் சூரியனைப் பார்த்து வணங்கினுன். காளைகளின் வால்ப்புரத்தைத் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கொண்டான். கலப்பை பூட்டினுன்.

"மாரியாத்தா, நீ தான் துணை!" என்று சொல்லி வயலில் இறங்கினுன். ஆகாயத்தைப் பார்த்தான். இரட்டைக் கருடன்கள் இடபுறத்தில் வட்டமிட்டன. அகமகிழ்ந்தான். கலப்பையைத் தொட்டுக் கும்பிட்டான். 'ந்தா!' என்று ஒரு சிறு சத்தம் கொடுக்கவும் பொன்னேர் புறப்பட்டது.

"மாரியாத்தா நீ தான் துணை! வயலுண்டு, நீயுண்டு! ஆறுமாதங் களித்து வருவேன். சாக்குகளில் நெல்லைக்கட்டி, வயல் வரப்பில் வைத்துக் காத்துக்கொண்டிருக்கணுமம்மா!" என்று மட்டும் அவன் சொல்லவில்லை.

"தாயே! நானும் உழைக்கிறேன். உழுகிறேன், பரம்படிக்கிறேன்; விதைக்கிறேன், நடுகிறேன், களையெடுக்கிறேன், காவல் காக்கிறேன். நீயும் துணைசெய் அம்மா! மழை பெய்யவேணும், பூச்சி புழு விழாமல் செய்யவேணும்! பயிர் ஓங்கவேணும்!" என்ருன்.

துர்க்கேசநந்தனி: பங்கிம் சந்த்ர சட்டோபாத்யாயர். ஸ்ரீ. கு. ப. ராஜகோபாலன் மொழிபெயர்ப்பு. அல்லயன்ஸ் கம்பெனி பிரசுரம். விலை 1-4-0.

துர்க்கேச நந்தினி, ஒரு காதற் கதை (Romance). காதலைச் சரடாகக்கொண்டு, யுத்தவீரர்கள், ராஜபுத்ரர்கள், முதலியவர்களுடைய வீர தீர பராக்ரமங்களைக் காட்டும் நவீனங்களை எழுதுவதில் பிரசித்தமானவர் பங்கிம் சந்த்ரர். வங்காள ஸ்காட் அல்லவா அவர்! அவருடைய எழுத்து வன்மையையும், சம்பவங்களைக் கையாளும் திறமையையும், ஒருவாறு அறிந்துகொள்ளும்படி, துர்க்கேசநந்தினி அமைந்திருக்கிறது. அருள், வீரம், பராக்ரமச் செயல்கள் நிரம்பிய இக்கதை, மிகவும் கவர்ச்சியுடையதா யிருக்கிறது.

இம்மாதிரியான, காதற் கதைகளுக்கே ஏற்பட்ட சில குறைகள், இதில் இருக்கத்தான் செய்கின்றன. மனித ஹிருதயத்திலெழும் ஆசாபாசங்கள், வெற்றி தோல்விகள், அங்கு காணமுடியாது. வாழ்க்கையின் பின்னலைப் பிரிக்க, ஒரு நுனி, அங்கு பார்க்க முடியாது. அறிவு வளர்ச்சிக்கு அவைகள் தூண்டுதல் போடமாட்டா. படிக்கும்வரையில், விநோதமாகவும், இன்பமாகவு மிருக்கும்.

துர்க்கேச நந்தினியில், 'கதை' இருக்கிறது. ஆனால், கதா பாத்திரங்கள் அதிகமாக இல்லை. 'காதல்' இருக்கிறது. சம்பவங்கள் இருக்கின்றன. வேகம் இருக்கிறது—வளர்ச்சி இல்லை. நவீனங்களுக்கு வேண்டிய, பரபரப்பு, ஆச்சரியம், முதலியவைகளைத் தரும், திரும்பு முனைகள், குறைவாக இருந்தாலும், மொத்தத்தில், 'கதை' உருப்படியானதா யிருக்கிறது. படிப்பதற்கு சுவாரஸ்மாயு மிருக்கிறது.

வர்ணனைகளில், பங்கிம் சந்த்ரர், சிறிதேனும், கருமித்தனம் செய்வதில்லை. 'ஆனந்தமடத்தில்' இயற்கைச் சித்திரங்களை வரைந்த அவர், இப்பொழுது மூன்று அழகிகளைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்தி, அவர்களுடைய ஒற்றுமை வேற்றுமைகளை, விளக்கிக் காட்டுகிறார். "விமலா, விளக்கைப்போன்ற ஜோதி, திலோத்தமை இளம் சந்த்ரப்ரபை, அயேஷா பால சூரிய பிரகாசம், திலோத்தமையின் அழகு, வஸந்தகாலத்து மல்லிகையைப் போன்றது. விமலாவின் அழகு, மாலையின் ஸ்தல பத்மம்போன்றது. அயேஷாவின், அழகு, காலைச் சூரியன் கரத்தால் மலர்ச்சிபெற்ற, தாமரை போன்றது." இம்மூன்று பெண்மணிகளின் புற அழகை, தெளிவாக, எடுத்துக்காட்டும் ஆசிரியர் அவர்களுடைய, அக அழகை, குண சௌந்தரியத்தை, அவ்வளவு தத்ரூபமாகக் காட்டவில்லை. ஆனால், அயேஷா, மாத்திரம், உயிரும், உணர்வும் கொண்டு, நிறைவேறாத காதலைக் கொண்ட, சிறந்த கதாநாயகியாக விளங்குகிறாள். முகவுரை சொல்லுவதுபோல், அவள் ஒரு உயர்ந்த சிருஷ்டிதான்.

ஸ்ரீ.கு. ப. ராஜகோபாலன் நடை, கதாநாயகி, திலோத்தமையின்அழகைப்போல, "வஸந்தகாலத்து மல்லிகையைப்போன்றது. மிருதுத் தன்மை கொண்டது. குற்றமற்றது. மணம் மிகுந்தது." ஸரஸமான இனிய நடையில், அழகாக மொழிபெயர்த் திருக்கிறார். உபயோகமானதும், விளக்கிக் காட்டுவதுமான, சிறந்ததொரு முகவுரையு மிருக்கிறது.

அல்லயன்ஸ் கம்பெனியின், முன் வெளியீடுகளைப் போலவே, இதுவும், நன்கு பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. அழகான படங்களுடன், நல்ல காகிதத்தில், சுத்தமாக அச்சிடப்பட்டிருக்கிறது.

என். சிதம்பர சுப்ரமண்யன்.

# கோபால கிருஷ்ணா

"நேற்று இரவு ராமாயணம் கேட்டாயே, அது எப்படி இருந்தது?" என்று கேட்டான் ஒருவன்.

"ரொம்ப கனமாய்த்தான் இருந்தது" என்று பதில் சொன்னான் ராமாயணம் கேட்டவன். பாவம், ராமாயணம் கேட்கப் போய் இரண்டு பேர்களைச் சுமந்துகொண்டிருந்த அவன் ராமாயணத்தைப் பற்றி என்னசொல்ல முடியும்?

'கோபால கிருஷ்ணா எப்படி இருந்தது" என்று என்னைக் கேட்டால் "ரொம்ப கனமாயிருந்தது!' என்று சொல்லும்படி இருக்கிறது. இரண்டு பேர்கள் என் தோள்பட்டையிலும், இரண்டு பேர்கள் என் மடியிலும் அமர்ந்திருக்கும் பாக்கியத்தை நான் பெற்றிருந்தபோது கோபால கிருஷ்ணா அல்ப சொல்பமான விஷயம் என்று சொல்ல முடியுமா? "ரொம்ப கனம். அடேயப்பா! அசாத்தியம்" என்று கதறத் தயாராயிருக்கிறேன்.

கோபால கிருஷ்ணா கண்ணனின் அதி பால்ய லீலைகளில் சிலவற்றை புதிய முறையில் சித்தரித்துக் காட்டுகிறது. இந்தப் புராணப் படங்களைப் பார்த்து அலுத்துப்போயிருக்கும் நமக்கு "ஏது? பிரபாத்காரர்கள்கூட இப்படி கிருஷ்ணனையும், ராமனையும் படம்பிடிக்க ஆரம்பித்து விட்டார்களே. தமிழ் நாட்டு வாடை அடித்துவிட்டதோ?" என்று பயந்தோம். "புராணப் படங்களை நாங்கள் எல்லோரையும்போல் பிடிக்க மாட்டோம். எங்களுக்குத் தனி வழி இருக்கிறது" என்று பிரபாத்காரர்கள் பதிலளித்து விட்டார்கள். ஆமாம்; ஹாஸ்ய ரஸத்தைப் பொழிந்து பக்தி பரவசத்தை உண்டாக்குகிறார்கள்.

கிருஷ்ணனாக நடிக்கும் ராம் மராதே என்னும் பிள்ளையாண்டான் நன்றாக நடிக்கிறான். நடிப்பதைவிட நன்றாகப் பாடுகிறான். 'எதிர்பாராததில்' நடித்த பரசுராம் என்ற பையன் கிருஷ்ணன் தோழனாக இப் படத்தில் வருகிறான். இவன் நடிப்பைப் பார்க்கும்போது, "சரி! எதிர்காலத்தில் நமது நாட்டின் நடிப்புக்கலை மஹோன்னதமாய் இருக்கப்போகிறது. இனிமேல் நமக்கு என்ன குறை?" என்று திருப்தி உண்டாகிறது.

சாந்தா ஆப்தேயைப்பற்றியல்லவா முதலில் எழுதவேண்டும். அப்படி இல்லாமல் மற்ற விஷயங்களைப்பற்றிக் கூறுகிறீர்களே என்று கேட்கிறீர்கள். சாந்தாவைப் பற்றி அதிகம் எழுதுவதற்கில்லை. அவரே ரொம்பக் கொஞ்சமாய் நடித்திருக்கும்போது கடைசியில்தானே சொல்ல வேண்டும்? ராதையாக நடிக்கும் சாந்த ஆப்தே சிற்சில கட்டங்களில் வந்து தானும் அப்படத்தில் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கிறார். அவ்வளவு தான்.

நல்லவேளையாக சாந்தே ஆப்தேக்கு ஆறு பாட்டுகள் கொடுத்திருப்பது ஆறுதலை உண்டாக்குகிறது. இல்லாவிட்டால் அவரைப்பற்றி 'வந்தார். போனார்' என்பதோடு முடித்துவிடும்படி இருந்திருக்கும். 'ஸர் ஸர் ஸர்வத்' 'பச்பன்கா' என்ற பாட்டுக்கள் செவியின்பம் கொடுத்து ஆத்மசாந்தி அளிப்பவை. இப் பாட்டுகளைக் கேட்கவாவது ஒரு தடவை அல்ல, இரண்டு தடவை கோபால கிருஷ்ணாவைப் பார்க்கப் போகவேண்டும்.

கோபால கிருஷ்ணாவில் இதைவிட சாந்தா ஆப்தேயின் நடிப்புக்கு எப்படி இடங்கொடுக்க முடியும்? அப்படி இடம் கொடுத்தால் கதைப்போக்கு சிதைந்து போய் விடாதா? புராணக் கதைகளின் வரையரைப்புகளுக்கு ஒட்டித்தானே நடிப்புக்கு இடம் கொடுக்கவேண்டும்?

இந்தக் கேள்விகளுக்குப் பதிலாக இரண்டு கேள்விகளைத் திருப்பிக் கேட்டு விடலாம். சாந்தா ஆப்தேயின் நடிப்புத் திறமைக்கு பரிபூரண விடுதலை அளிக்க வேண்டாமா? அவர் நடிப்புக்கு இடங் கொடுக்காத புராணக் கதைகளை ஏன் படம் எடுக்கவேண்டும்? இந்த விஷயங்களை பிரபாத் கம்பெனிக்காரர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும்.

வே. சு. ராமகிருஷ்ணன்